பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 28 ஞாயிற்றுக்கிழமை (12.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி-24

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல் — thangan 672002 @ yahoo.com
உங்கள் பிள்ளைகளுக்கு
சிறந்த இடம்
Better Place
for your children

## நடுவுநிலை தவறாமல்

# சமாதானம் ஏற்படும் வரை நோர்வேயின் பணி தொடரும்

40 மில்லியன் செலவில்

## யாழ்.குடாவிற்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் சீரான மின்சாரம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் அகதிகள் விவகார அமைச்சும்,மின்சார எரிசக்தி அமைச்சு இணைந்தும சீரான மின்சாரம் வழங்குவதற்காக 40மில லியன் ரூபா செலவில் வேலைத் திட்டத்தை மேற்கொள்ளவுள்ளன.

இந்த வேலைத் திட்டத்திற்கான ஒப்பந்தம் ஒன்று எதிர்வரும் 13ம் திகதி கொழும்பில் கைச்சாத்திடப் படவுள்ளதாகப் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.இவ் ஒப்பந்தத்தில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கரு ஜெயசூரியவும், புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவும் கைச்சாத்திடவுள்ளனர்.

(ந-5)

## மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் உரிமை வழங்க் அரசு பின்னடிப்பு

(கொழும்பு)

தொளாயிரம் மெகாவாட் நிலக்கரி மின்உற்பத்திநிலையம் ஒன்றினை 97 பில்லியன் இலங்கை ரூபா செலவில் உருவாக்குவதற்கு,அவுஸ்ரேலிய-யப்பான் கூட்டு நிறுவனமான ''பாக்லே''முன் வந்திருக்கும் நிலையிலும்அதற்கான அனுமதியை இலங்கை அரசாங்கம் வழங்கத்தயங்குகின்றது என்று அந் நிறுவனத்தின் பணிப்பாளர் பிலிப்கனம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கை மின்சார சபைக்கு மிகவும் மலிவான விலையாகிய ரூ.4.10க்கு ஒரு அலகு மின்சாரத்தை வழங்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளோம். இதனால் மின்சாரப்பிரச்சினை முழு இலங்கைக்குமே இல்லாமற்போகும்.

இதற்கான எமது விருப்பத்தை பத்து ஆண்டுகளுக்கு முன்னரேயே நாம் இலங்கை அரசாங்கத்திற்கு

(10ம் பக்கம் பார்க்க)

## நோர்வேப் பிரதமர் பொன்ட்விக்ட் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம்

(நமது நிருபர்)

**அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அமைதி சமாதானத்தை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அனுசரணையாளராக மத்தியஸ்தம் வகிக்கும் நோர்வே நடுவு நிலைமையுடன் தனது பணியைத் தொடர்ந்தும் செயற்படுத்தும்.**

இவ்வாறு நோர்வேப் பிரதமர் பொன்ட்விக்ட் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி குமாரதுங்க கடந்த மாதம் 30ந் திகதி நோர்வேப் பிரதமருக்கு,இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோண் வெஸ்பேர்க் விடுதலைப் புலிகளுக்கு வானொலி ஒலி பரப்புச் சாதனங்களைப் பெற்றுக் கொடுத்தமை,இலங்கையின் இறைமையைப் பாதிக்கின்ற விடயமென்றும், இத்தகைய நடவடிக்கை நோர்வேயின் அனுசரணையில் தொடரும் சமாதான முயற்சியில் ஒரு பக்கம் சார்பான போக்கையும்,நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துவதாக உள்ளதென்றும்,

புலிகளுக்கு ஒலி பரப்புச் சாதனங்களைப் பெற்றுக் கொடுத்ததைக் கண்டித்து கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

அக்கடிதத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே நோர்வேப் பிரதமர் நேற்று தூதுவர் ஜோண் வெஸ்பேர்க் ஊடாக ஜாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அனுப்பிய கடித்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும

(10ம்பக்கம் பார்க்க)

## அவுஸ்ரேலிய சமஷ்டி முறையே இலங்கைக்குப் பொருத்தமானது

- அந்நாட்டு பா.உறுப்பினர் கருத்து -

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவிலுள்ள சமஷ்டி முறையைப் போல் இலங்கையிலும் சமஷ்டி முறையை அறிமுகப்படுத்துவது பொருத்தமானதாக இருக்குமென்று அவுஸ்ரேலியப் பாராளுமன்ற உறுப்பினர் யூட் பெரேரா தெரிவித்துள்ளார்.

யின் பகுதிகளை ஐக்கியப்படுத்தும் கலாசாரம் உட்பட பல்வேறு தேவைகளைக் கொண்ட மக்கள் தாம் வாழும் பிரதேசங்களில் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் நிலை இருக்க வேண்டியது அத்தியாவசியமானது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

நீர்கொழும்பைச் சேர்ந்த இவர்

டோரியா மாநிலப் பாராளுமன்ற உறுப்பினராவார்.

சிங்களவரான இவர் அவுஸ்ரேலிய பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது இலங்கையராவார்.

இதேவேளை இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்

## கொழும்பு பிரதி மேயர் குழு இன்று யாழ்ப்பாணம் வரும்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில், கொழும்பு மாநகர

ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பு மாநகர பிரதி மேயர் தலைமையிலான குழு

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையில், கொழும்பு மாநகர பிரதி மேயர் மற்றும் அவரது குழுவினர் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

யாழ்.வரும் இக்குழுவினர் குருநகர் மற்றும் பாசையூர் பகுதிகளில் புனரமைப்பு பணிகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்பு மாநகர பிரதி மேயர் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தருவது பற்றி தமக்கு உத்தியோக பூர்வமான அறிவிப்பு எதுவும் கிடைக்கவில்லையென்று யாழ்.மாநகர மேயர் எஸ்கந்தையன் தெரிவித்துள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

...மென்று அவுஸ்ரேலியப் பாராளுமன்ற உறுப்பினர் யூட் பெரேரா தெரிவித்துள்ளார்.

சமஷ்டி முறை பிரிந்துள்ள இலங்கை ... வேண்டியது அத்தியாவசியமானது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

நீர்கொழும்பைச் சேர்ந்த இவர் தற்போது அவுஸ்ரேலியாவின் விக்...

இதேவேளை இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தேசிய கீதத்தை மாற்ற வேண்டாம்
## சிஹல உறுமய வேண்டுகோள்

(கொழும்பு)

தேசிய கீதத்தில் மாற்றங்கள் செய்வதற்கு எடுக்கப்பட்டு. வரும் முயற்சிகளுக்கு சிஹல உறுமய தனது கண்டனத்தை கலாசர விவ்கார அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளது.

இத்தகைய முயற்சிகளை உடனடியாக கைவிட வேண்டுமென்று சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரத்ன அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குவுக்கு கடிதமெழுதியுள்ளார்.

அக கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; இந் நடவடிக்கை அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாவது

(10ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கில் நியமிக்கப்படவுள்ள
# 3 ஆயிரம் ஆசிரியர்களில் ஆயிரம் பேர் பட்டதாரிகள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கிற்குத் தேவையான ஆசிரியர்களின் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் வழிகாட்டலின் படியே மேற்கொள்ளப்படும்.க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்தவர்களிடமிருந்து 2 ஆயிரம் ஆசிரியுர்களையும, பட்டதாரிகளில் இருந்து ஆயிரம் ஆசிரியர்களையும் ஜனவரியுடன் தேர்ந்தெடுப்பதென்று முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்தாலும்,தவிர்க்கமுடியாத காராணங்களினால் அது தாமதமாகியுள்ளது.இன்னும் ஒரு சில வாரங்களில் இது நடை பெற்றுவிடும் என்று கல்வி அமைச்சர் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் ஆசிரியர் பற்றாக்குறையை தீர்ப்பதற்கான ஆட்சேர்ப்பு அதற்கான திட்டத்தை

(10ம் பக்கம் பார்க்க)

## பிரதம சங்கநாயக்கர் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

மாத்தறை அமரபுர நிக்காயாவின் பிரதம சங்கநாயக்கர் சென்று கொண்டிருந்த வான் மது போதையில் இருந்த குழுவொன்றினால் இடை மறிக்கப்பட்டு அடித்து நொருக்கப்பட்டதுடன்,தேரரும் தாக்கப்பட்டுள்ளார்.வண.பேரகம விமலஜோதி தேரரும் அவருடன் சென்றிருந்த வேறும் இருவரும் தாக்கப்பட்டதாக தங்காலை உதவி பொலிஸ் அத்தியட்சகர் அனுரா செனநாயக்க தெரிவித்தார்.ஒரு வாகனம் இன்னுமொரு வாகனத்தை முந்திச் சென்றதனால் ஏற்பட்ட தகராறே இதற்கு காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ)

# சிப்பாய்க்கு பிணை வழங்க தமிழீழ நீதிமன்று மறுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்ட இராணுச் சிப்பாய் எச்.எஸ்.நிமால் குமார கேக்கு பிணைவழங்குமாறு விடுக் கப்பட்ட கோரிக்கை நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மணலாறுப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் காவலரண் பகுதிக்குள் கடந்த மாதம் 24ந் திகதி ஊடுருவிய போது கைது செய்யப்பட்ட பிரஸ்தாப சிப்பாய் மீதான விசாரணைகள் பூர்த்தியாகாததால் பிணைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)

# 18வயதுக்கு குறைந்தவர்களை புலிகள் சேர்ப்பதில்லை!

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் 18 வயதுக்கு குறைந்தவர்களை சேர்த்துக் கொள்வது இல்லையென்று மட்டு அம்பாறை அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

இது குறித்து அரசியல் துறை வெளியிட்ட அறிக்கையில்;18 வயதுக்குக குறைந்தவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய விரும்பி முன்வந்தாலும்,அவர்களை,பெற்றோர்களை அழைத்து அவர்களிடம் ஒப்படைத்து விடுகிறோம்.

ஆனால் இதனை சில ஊடகங்கள் தவறாகத் திரித்து புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்த்துக் கொள்கின்றனர் என்று தவறாகப் பிரசாரம் செய்வதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுக்கவே பயங்கரவாதத் தடுப்புச சட்டம் அமுலானது

## அதனை நீக்க முடியாது என பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தடைச் சட்டத்தை அரசு நீக்கும் தருணம் ஏற்பட்டாலும் அதனை முற்று முழுதாக நீக்கக்கூடா தெனவும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று முன்தினம் பாராளு மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இத் தடைச்சட்டத்தை நீக்கக் கோரி கூட்டமைப்பு யாழ்.மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி சமர்ப்பித்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தின் போதே பாது காப்பு அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சர் உரையாற்றுகையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக ஆராய் ந்த பின்னரே அதனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

நாட்டில் இடம் பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத் துடன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இத் தடுப்புச் சட்டத்தை நீக்கு வதற்கு பாராளுமன்றத்தின் 225 உறுப் பினர்களும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி பல மட்டங்களில் இருந்து கோரிக்கைகள் விடப்படுகின் றன. சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றத்தின் அடிப்படையில் இச் சட்டத்தை நீக்குவது குறித்து அரசு பரிசீலனை செய்யும் என்றார்.

இதே வேளை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் சட்ட மூலம் குறித்து விவாதிக்க நீண்ட நேரத்தை ஒதுக்கித்தருமாறு மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன சபாநாயகரை கேட்டுக் கொண்டார்.ஆனால் இதனை சபாநாயகர் ஏற்க மறுத்து விட்டார்.

இவ் விவாதத்தின் போது பாராளு மன்றத்தில் உரையாற்றிய இரா. சம்பந்தன் தமிழர்படை ஒன்று உருவாகுவதற்கு இந்தத் தடைச் சட்டமே காரணமாக இருந்தது.



1979 ஆம் ஆண்டு இந்தத் தடைச் சட்டம் அமுலானதில் இருந்து தமிழர் கள் துன்புறுத்தப்பட்டும், கைது செய்தும் காணாமல் போயும், பாலியல் வல்லுறவுகளுக்கு ஆளாகியும், கொலைகள் செய்யப்பட்டும் உள்ளனர் எனவும் அவர் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டி யுள்ளார். (உ-8)

## மீள் குடியமர்வு கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 9ஆயிரத்து 639குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த 11ஆயிரத்து 527குடும்பங்களில், ஆயிரத்து 888குடும்பங்களுக்கே கொடுப் பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள குடும்பங்களுக்கு கொடுப்பனவுகளை வழங்க 14கோடி 30இலட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் தெரிவித் துள்ளார். (உ-8)

# எந்த இனத்தையும் அடக்கு முறையால் வெற்றி கொள்ள முடியாது

## கியூ டெக் இயக்குநர் உரை

(யாழ்ப்பாணம்)

மற்றவர்களுடைய கருத்துக் களுக்கு மதிப்பளித்து அவர்களு டைய அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிப்பதன் மூலம் தான் சமா தானத்தை எட்டமுடியும்.

நேற்று முன்தினம் முற்றவெளி யில் புளொட் அமைப்பின் அரசியல் பிரமுகர் எஸ். இருதயராஜன் தலை மையில் நடைபெற்ற 4ஆவது உலகத்தமிழாராய்ச்சி மாநாநாட் டின் போது உயிரிழந்தவர்களின் 29ஆவது நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கியூடெக் நிறுவன இயக்குநர் ஜீ.சீ. ஜெயக்குமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் இறந்தவர்கள் மட்டுமல்ல உயிருடன் வாழ்பவர் களும் எமது விடுதலைக்காக நகர வேண்டும்.

இவர்களுடைய மரணம் ஒரு இனத்தினுடைய, சமுதாயத்தினு டைய அடக்குமுறையை வெளிக்காட்டி நிற்கிறது.

ஆனால், ஒரு இனத்தை அடக்கு முறையால் ஒருபோதும் வெற்றி கொள்ள முடியாது, நாம் சம பலத் துடன் ஒன்று சேர்ந்து இருப்போமா னால் எம்மை யாரும் அடக்கி விட முடியாது என்றார். (உ-6)

## குறுநாடக போட்டியில் வெள்ளிப்பதக்கம்



மல்லாகம் மகாவித்தியாலய க.பொ.த உயர்தர வகுப்பு மாணவி செல்வி பா.நர்மதா கடந்த ஆண்டு நடைபெற்ற தமிழ்த்தின குறுநாடக ஆக்கப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தைத் தட்டிக் கொண்டார்.

இவர் அளவெட்டி பாலச்சந் திரன் - பத்மறோஜினி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியாவார்.

## தீவுப்பகுதிக்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து நேரடி யாகத் தீவுப்பகுதிக்கு மின்சாரம் வழங்க வேண்டுமென்று யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என். மதனராஜா நேற்று முன்தினம் நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத் தொடரில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புங்குடுதீவு, கரம்பன், மௌஞ்சி முனை ஆகிய மக்கள்மீளக் குடிய மர்ந்த பிரதேசங்களுக்கு உடனடி யாக மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு மென்று அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (இ)


ULTRA HOSPITAL SUPPLIES

ULTRA HEALTH CARE (Australia Holdings)

SALES AGENT WANTED




* *Portable and bedside monitoring equipment of human and vet usage.*
* *Over 20 years experience in design and production of patient monitoring equipment.*
* *Worldwide distribution.*



Use as a stand alone portable ECG unit [CT100/200],

Or through a computer interface [CT200 only]

* ANAESTHESIA
* ANTISEPTICS & CLEANERS
* CARDIOLOGY
* DERMATOLOGICAL PREPARATION
* DIAGNOSTIC
* EXAMINATION LIGHTING
* ENT
* MUSCULOSKELETAL SYSTEMS/ ORTHOPAETIC
* OPHTHALMIC PRODUCTS
* PATHOLOGY
* SURGICAL INSTRUMENTS
* STETHOSCOPES
* SURGICAL TAPES & STRAPPING
* SKIN CLOSURE

**ULTRA HEALTH CARE**

Distributing in Sri - Lanka, India and Maldives

740, Navalar Road, Jaffna.

Phone : 021-2223393

Mobile: 077-773-4175/077-724-4725

E-mail: ultraintl@hotmail.com

# எதிர்பார்க்கும் தீர்வு எட்டப்படாவிடின் குடாநாடு தழுவிய போராட்டம் வெடிக்கும்

## வலி வடக்குப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் பிரதமருக்கு மகஜர்

(ஏழாலை)

அண்மையில் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்குமிடையில் தாய்லாந்தில் நடைபெற்ற 4 ஆம் சுற்றுப் பேச்சில் எட்டப்பட்ட தீர்வில் மீளக் குடியமர்தல் சம்பந்தமாக மேற் கொள்ளப்பட்ட தீர்மானத் திற்கமைவாக எமக்கு நல்ல முடிவும், விடிவும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாம் மேற்கொண்ட உண்ணாவிரத மறியற் போராட்டத்தினை தற்காலிகமாக இடைநிறுத்தி நல்லதோர் தீர்வை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

தவறும் பட்சத்தில் குடாநாடு தழுவிய போராட்டங்களை அரச, அரச சார்பற்ற, ஏனைய பொது நிறுவனங்கள் ஸ்தம்பிதம் அடையும் அளவிற்கு எமது போராட்டம் விஸ்தரிக்கப்படும் என்பதனை கவலையுடன் அறியத்தருகின்றோம்.

வலிவடக்குப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வலி வடக்குப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினராகிய நாம் எமது பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் அபிலாசைகளை இந்த மகஜரின் மூலம் எடுத்துக்கூறுவது மட்டுமன்றி ஒரு நீதியான உண்மையான தர்மம் நிறைந்த தீர்வை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

தமிழீழ மக்கள் மீது திணிக்கப்பட்ட போரினால் இப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் தங்கள் உயிர்க்காப்பிற் காக தாம் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டும், உடைமை கள் உறவுகள் அனைத்தையும் விட்டுப் பிரிந்து பிற மாவட்டங்களிலும், பிறர் வீடுகளிலும், அகதிமுகாம்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறதை தாங்கள் அறிந்ததே.

இந்தக் கொடிய போரினாலும், பொருண்மிய தடைகளினாலும் சுகாதார, போக்குவரத்து, கல்வி சீர்கேட்டினாலும் நாம் தொடர்ந்து ஒரு துன்பமான வாழ்க்கையினை வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆகவே கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக நடந்த இந்தப் போர் புரிந்துணர்வு ஒப்பந்தத் தினூடாக ஒரு முடிவுக்கு வந்திருப்பதாக பேச்சளவிலும், அறிக்கை வாயிலாகவும் தினம் தினம் செய்திகள் வெளியாகிலும் கூட எமது மக்களின் வாழ்வியலிலும் சுமுகநிலை தோன்றவில்லை.

மாறாக துன்பமும் துயரமும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. சொந்த வாழ்விடங்களில் வாழ முடியாமலும், சொந்த மண்ணில் விவசாயம் செய்யமுடியாமலும், கடலில் மீன்பிடிக்க முடியாமலும் வழிபாட்டுத்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்ய முடியாமலும் சீரான கல்வி வேலைவாய்ப்புக்களை இழந்து அகதி முகாம்களில் அல்லல்படுகிறோம். இது மனித உரிமை மீறலின் அதி உச்சமான கொடூரமாகும். இதனை அரசும், சர்வதேசமும் இது வரை உணரவில்லை என்பதையிட்டு மிகுந்த மனவேதனை அடைகிறோம். எமது சொந்தக்கால்களில் சொந்த உழைப்புகளில் சொந்த உறவின் மத்தியில் வாழ முடியாத நிலையில் நின்றுகொண்டு சுமுகமான வாழ்வை மீளப்பெறுவதற்காக இப்போராட்டத்தை ஆரம்பித்தோம்.

வெயிலின் கொடுமையையும் பருவ மழையின் சீற்றத்தையும் எமது நாளாந்த கடமைகளையும் புறந்தள்ளிவிட்டு எமது வாழும் உரிமையையும் வேண்டி இப் போராட்டத்தை ஆரம்பித்தோம். அரசோ, அரச அதிகாரிகளோ எமது விடயத்தில் பாராமுகமாக இருந்ததும், இருப்பதுவும் மிகவும் வேதனைக்குரியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-12)





இயக்கத்தில் இணையச் சென்ற சிறுவர்களை பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட அரசியல் துறை அலுவலகத்தில் இடம்பெற்ற போது எடுக்கபபட்ட படங்கள்


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## காங்கேசன்துறை / பருத்தித்துறை துறைமுகங்களில் இருந்து பொருட்களை லொறி மூலம் யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிற்கு ஏற்றிச் (காவி) செல்வதற்கான

## கேள்வி கோரல் - 2003

புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சினால் யாழ் மாவட்டத்திற்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களை லொறி மூலம் காங்கேசன்துறை/ பருத்தித்துறை துறைமுகங்களிலிருந்து பின்வரும் இடங்களில் உள்ள உணவுக் களஞ்சியங்களிற்கு ஏற்றிச் (காவி) செல்வதற்கு ஒரு நாளில் குறைந்தது 60 லொறிகளை சேவைக்கு வழங்கக் கூடியவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| ஏற்றும் இடம் | இறக்கும் இடம் |
| --- | --- |
| காங்கேசன் துறைமுகம் | காங்கேசன்துறைக் களஞ்சியம் |
| பருத்தித்துறை துறைமுகம் | புலோலி உணவுக் களஞ்சியம் |
| | நாவற்குழி உணவுக் களஞ்சியம |
| | கோண்டாவில் உணவுக் களஞ்சியம் |
| | கொக்குவில் உணவுக் களஞ்சியம் |
| | ஊர்காவற்றுறை உணவுக் களஞ்சியம |

மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இணை யாழ். மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு செயலகக் கணக்காளாரிடம் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bid Bond) ரூபா 25,000.00 ஐ யாழ் மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்பு செயலக கணக்காளரிடம் செலுத்தி (அரசாங்க கேள்வி நடைமுறை வழிகாட்டி அத்தியாயம் iv பந்தி 46:7 இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களிற்கு பொருந்தாது) பணப் பற்றுச்சீட்டினை (பொது 172) பெற்று அதன் புகைப் படப்பிரதியை கேள்விப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அர்சாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமோ கணக்காளரது அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.01.27ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "காங்கேசன்துறை/ பருத்தித்துறை துறைமுகங்களிலிருந்து பொருட்களை லொறி மூலம் யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிற்கு ஏற்றிச் செல்வதற்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.

2003.01.12 ஆம் திகதி தொடக்கம் 2003.01.24 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை கேள்விப் படிவங்களையும், ஆவணங்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக தகவல்கள் தேவைப்படின் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக கணக்காளர்/ உதவித்திட்டப்பணிப்பாளர் (நிவாரணம்) ஆகியோரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சேவை தேவைப்படும் போது உடனடியாக ஒரு (01) நாளில் 60 லொறிகளைச் சேவையில் ஈடுபடுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

சேவையில் ஈடுபடுத்தப்பட்ட திகதியில் இருந்து நான்கு (04) வார காலத்திற்குள் கொடுப்பனவு காசோலை மூலம் செய்யப்படும்.

**செ. பத்மநாதன்**

தலைவர் / அரச அதிபர்
மாவட்ட கேள்விச்சபை / மாவட்டச் செயலகம்.
யாழ்ப்பாணம். (C/5624)


# கொழும்பு திரும்பினர்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் நடைபெற்ற நரன்காம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அரச தரப்புப் பிரதிநிதிகளான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ரவூப் ஹக்கீம் ஆகியோர் கொழும்பு திரும்பினர்.

இதேவேளை அமைச்சர் மிலிந்த மொறகொட தாய்லாந்திலிருந்து இந்தியா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)






நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிர்நீத்தவர்களின் 29 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ். முற்றவெளியில் உள்ள நினைவிடத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

# ஈராக்கின் வசம் பாரிய அழிவாயுதங்கள் உள்ளன

## அமெரிக்கா மீண்டும் வலியுறுத்து

(வாஷிங்டன்)

ஈராக்கிடம் பாரிய அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருப்பதைத் தாம் உறுதியாக நம்புவதாக அமெரிக்கா மீண்டும் கூறியுள்ளது.

இக்கருத்தை வெளியிட்டிருக்கும் அமெரிக்க வெள்ளை மாளிகையின் முக்கிய பேச்சாளரொருவர் ஈராக் ஐக்கிய நாடுகளின் ஆயுத சோதனையாளர்களுக்குப் போதிய ஒத்துழைப்புக்கள் எதனையும் வழங்க வில்லையென்றும் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதேவேளை ஈராக்கில் ஆயுத சோதனைகளை நடத்தும் ஐக்கிய நாடுகளின் ஆயுத சோதனையாளர்களின் தலைவர் ஹான்ஸ் பிளிக்ஸ் இதுவரை தாம் ஈராக்கில் பாரிய அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களைப் பார்க்கவில்லையெனக் கூறியுள்ளார்.

இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளாத வெள்ளைமாளிகைப் பேச்சாளர் ஆயுத சோதனையாளர்கள் ஈராக்கில் பாரிய அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருக்கும் இடத்தைப் இன்னும் பார்க்கவில்லையெனத் தெரிவித்துள்ளார். (உ-2)

## லெபனானின் கருத்துக் குறித்து

## கனடா விளக்கம் கோரும்

(பெய்ரூட்)

லெபனானில் இயங்கும் கிஸ்புல்லா அமைப்பை சட்ட விரோத குழுவாக கனடா பிரகடனம் செய்வதற்கு அந்நாட்டுத் தீய சக்திகள் சிலவற்றின் அழுத்தமே காரணம் என லெபனான் குற்றம் சாட்டியுள்ளது.

இக்குற்றச்சாட்டைச் சுமத்திய கனடாவுக்கான லெபனான் தூதுவரை அழைத்து இது குறித்து விளக்கம் கோரப்போவதாக கனடா நேற்று அறிவித்துள்ளது. (உ.2)

## ஐவரிக்கோஸ்ட் போராளிகள்

## சமாதானப் பேச்சில் இருந்து விலகுவதாக அறிவிப்பு

(அபிட்ஜான்)

பிரான்ஸின் அனுசரணையுடன் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக் கொள்வதாக ஐவரிக் கோஸ்ட் பிரிவினைவாதப் போராளிகள் அறிவித்துள்ளனர்.

அரசாங்கப்படையினர் தம்மீது மேற்கொண்ட தாக்குதலையடுத்தே இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர்கள் அவ்வறிப்பில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை ஐவரிக்கோஸ்ட் போராளிகளின் கட்டுப்பாட்டிலிருந்த நகரத்தின மீது அரசபடை. விமானத்தாக்குதலை மேற்கொண்டதும் இதற் குப் பதிலடியாக பிரிவினைவாதப் போராளிகள் அரச துருப்பினர் நிலைகொண்டிருந்த பகுதிமீது நேற்றுக் தாக்குதல் நடத்தியதும் குறிப்பிடத்தக்கது. (உ.2)

WORLD NEWS உலக தரிசனம்

## வடகொரியா மீது உலக நாடுகள் கண்டனம்

(வாஷிங்டன்)

அணு ஆயுதப்பரவல் தடுப்புப் பந்தத்திலிருந்து வடகொரிய விலகியுள்ளமையை உலகநாடுகள் கடுமையாகக் கண்டித்துள்ளன.

இந்தவிடயத்தில் ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபை தலையிட வேண்டுமென பிரான்ஸ் கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை அணுஆயுதப் பரம்பல் ஒப்பந்தத்தை இதுவரை காலமும் வடகொரியா மதித்துவரவில்லை.

இதனால், வடகொரியா தற்போது இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகியிருப்பது ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல என்று கொங்கொங்கிற்கான அமெரிக்காத் தூதுவரொருவர் தெரிவித்துள்ளார். (உ.2)

# ஒஸாமாவின் சகாக்கள் கைது

(பேர்ளின்)

அல்கெய்டா அமைப்புடன் தொடர்புடைய இரண்டு ஜேர்மன் நாட்டவர்களை ஜேர்மனியப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்துள்ளனர்.

பிராங்போர்ட் விமானநிலையத்தில் வைத்துக்கைது செய்யப்பட்ட இவர்களில் ஒருவர் ஒஸாமா பின்லேடனின், சார்பில் நிதியைக் கையாளும் முக்கிய பொறுப்பை வகித்தவர் என ஜேர்மன் பொலிஸார் கூறியுள்ளனர். (உ-2)

## உடன் வெளியேற தமிழர்களுக்கு உத்தரவு

(புதுடில்லி)

புதிய கர்நாடக எல்லைக் குட்பட்ட எல்லைப்பகுதியில் வாழும் தமிழர்கள் அந்தப்பகுதியை விட்டு உடனடியாக வெளியேற வேண்டுமென அம்மாநில வனத் துறை உத்தரவிட்டுள்ளது.

இப்பகுயில் வாழும் தமிழர்கள் மீது கர்நாடக அதிரடிப்படையினரும், வனத்துறை அதிகாரிகளும் கடுமையான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதனைத்தடுக்கும் நடவடிக்கையாகவே கர்நாடகவனத்துறை இந்த அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக் கூறப்படுகின்றது. (உ.02)

## இறைமைக்கு இழுக்கு ஏற்படாவகையில் அமெ.படைகள் வெளியேற வேண்டும்

### தென்கொரிய அதிபர் கோரிக்கை

(சியோல்)

தென்கொரியாவில் நிலைகொண்டிருக்கும் அமெரிக்கப் படைகள் தென்கொரியாவை விட்டு வெளியேறவேண்டுமெனத் தென்கொரியாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள ரோமோஹோன் அமெரிக்காவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரியாக்களின் யுத்தம் காரணமாகத் தென்கொரியாவுக்கு உதவும் முகமாக 1953இல் அமெரிக்கா தனது படைகளை அங்கு வைத்திருந்தது.

இவ் விதத்தில் அங்கு நிலைகொண்டவர்களில் சுமார் 37ஆயிரம் படைவீரர்கள் இதுவரை வெளியேறியுள்ள போதிலும், மேலும் பல ஆயிரக்கணக்கான படையினர் தொடர்ந்தும் தென்கொரியாவில் நிலை கொண்டுள்ளனர்.

இதனால் நாட்டின் இறைமைக்கு பெரும் பங்கம் ஏற்பட்டுள்ளனதெனவும், இவர்களை மிக விரைவில் நாட்டை விட்டுவெளியேற்றுவது அவசியமெனவும் ரோமோ ஹோன் கேட்டுக் கொண்டுள்ளார். (உ.2)



அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் கடும் கொட்டும் பனிக்குள்ளும் தனது நாட்டின் இராணுவ வீரர்களின் முக்கிய தளங்களைப் பார்வையிட்ட பின்னர் திரும்புவதையே இங்கு காண்கிறீர்கள், அவர் தன்னுடன் அழைத்துச்செல்வது தனது செல்லப் பிராணியான நாய்.

# சர்வதேச கிரிக்கெட் சபையின் இந்திய கிரி. அணியுடனான பிணக்கிற்கு இணக்கமான தீர்வு

(புதுடில்லி)

விளம்பரங்கள் தொடர்பாக கடந்தசிலகாலமாக சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இந்தியக்கிரிக்கெட் அணிக்கும் இடையில் நிலவிவந்த குழப்பநிலை முடிவுக்கு வந்துள்ளதாக சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான விளம்பர அனுசரணையாளர்களின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள இந்திய அணி மறுத்ததையடுத்து சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இந்திய அணிக்குமிடையில் கடந்த சில காலமாகக் குழப்பநிலை தொடர்ந்தது.

இந்திய அணி, அனுசரணையாளர்களின் நிபந்தனைகளைத் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளதையடுத்து இக்குழப்ப நிலை முடிவுக்கு வந்துள்ளதெனச் சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கூறியுள்ளது. (உ-2)



பிரபல எழுத்தாளரும் உலகிலேயே அதிகூடிய வருமானம் பெறும் அமெரிக்கப் பெண்ணையே இங்கு காண்கிறீர்கள், இவர் பெறும் வருமானம் எவ்வளவு தெரியுமா? 387கோடி அமெரிக்க டொலர்கள்.

## அகதிகளைப் பொறுப்பேற்கவுள்ள நியூஸிலாந்து

(வெலிங்டன்)

அவுஸ்ரேலியாவினால் நிராகரிக்கப்பட்டு பசுபிக் தீவுகளிலுள்ள தடுப்பு முகாம்களில் வாழ்ந்து வரும் அகதிகளில் 150பேரையும் நியூஸிலாந்து பொறுப்பேற்கவுள்ளது.

பசுபிக் தீவுகளான பப்புவா நியூக்கினி மற்றும் நெவ்ருதீவுகளில் கடந்த 16மாதங்களாக இருந்து வரும் இந்த அகதிகள் 150பேரும் அடுத்த மாதம் நியூஸ்லாந்து ஒக்லண்ட் நகருக்கு வரவுள்ளனர்.

ஆப்கான் மற்றும் மத்தியகிழக்கில் இருந்து இந்த அகதிகள் அவுஸ்ரேலியாவில் இருந்து வந்து கொண்டிருந்தபோது இடையில் மறிக்கப்பட்டு பசுபிக்தீவுகளில் உள்ள தடுப்பு முகாம்களில் இது வரைகாலமும் தங்க வைக்கப் பட்டிருந்தனர்.

நியூஸிலாந்து ஒவ்வொருவருடமும் ஐக்கிய நாடுகள்சபையினால் அனுமதிக்கப்பட்ட அகதிகளில் 750பேரை தனது நாட்டிற்குள் ஏற்றுக் கொள்கிறது. இந்த வருடம் ஏற்றுக்கொள்ளவுள்ள 750அகதிகளில் பசுபிக் தீவுகளில் இருந்து 150பேரை ஏற்றுக் கொள்கிறது.

## வளைகுடா பிராந்தியத்தினுள் மேலும் 35ஆயிரம் அமெ. துருப்புக்கள்

(வாஷிங்டன்)

வளைகுடாப் பிராந்தியத்திற்குள் மேலும் 35ஆயிரம் இராணுவ வீரர்களை அனுப்புவதற்கான உத்தரவுப் பத்திரத்தில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ற் நேற்றுக் கைச்சாத்திட்டுள்ளார்.

• வடகரோலினா இராணுவ முகாமிலிருந்த 7ஆயிரம் வீரர்களும் கலிபோர்னிய முகாமிலிருந்த 7ஆயிரம் வீரர்களும் இதில் அடங்குகின்றனர்.

தற்போது வளைகுடாப் பிராந்தியத்தில் நிலைகொண்டுள்ள 60 ஆயிரம் இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தி இராணு பலத்தை அதிகரிக்கும் நோக்கிலேயே டொனால்ட்ரம்ஸ் பீல்ற் இவ் உத்தரவுப் பத்திரத்தில் கைச்சாத்திட்டுள்ளாரெனக் கூறப்படுகிறது. (உ-2)

## சீனா நடவடிக்கை

(பெய்ஜிங்)

2005இல் மக்கள் தொகை 133கோடிக்கும் குறைவாக இருக்கும்படி கட்டுப்படுத்த சீனா நடவடிக்கை எடுத்து வருகிறது.

கரையோரப் பகுதி சுகாதார நிலை குறித்து இன்று

# கொழும்பு மாநகரசபை சிரேஷ்ட அதிகாரிகள் குழு நேரில் ஆராயும்

(யாழ்ப்பாணம்)
பாதுகாப்பு படையினரது கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட யாழ். கரையோரப் பிரதேசங்களில் நிலவும் சுகாதார சீர்கேடுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை செய்வதற்காக கொழும்பு மாநகர சபையின் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று பிரதி மேயர் அசாத்சாலி தலைமையில் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தி. மகேஸ்வரன், யாழ் மாவட்டத்தில் பாதுகாப்பு படையினரது கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட பிரதேச மக்களது அடிப்படை வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துவருகின்றார்.

இதன் அடிப்படையிலேயே அமைச்சர் மகேஸ்வரன், இப்பிரதேச சுகாதார சீர்கேடுகளை இனங்கண்டு அறிக்கை ஒன்றை தயாரிக்க உதவி செய்யுமாறு கொழும்பு மாநகர மேயர் பிரசன்ன குணவர்த்தனவை கோரியிருந்தார்.

இதற்கமைவாக யாழ் கரையோரப்பிரதேசங்களான கரையூர், பாஷையூர், திருநகர், கொழும்புத்துறை, தோப்புக்காடு (காரைநகர்) ஆகியவற்றில் இப்பிரதேச மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான, சுகாதாரம், நீர் விநியோகம், வடிகாலமைப்பு மற்றும் பொதுவசதிகள் போன்ற குறைபாடுகளை இனங்கண்டு அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்காக கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் ஜனாப் எம். அசாத்சாலி தலைமையில் கொழும்பு மாநகர சபையின் சிரேஷ்ட பொறியியலாளர் அடங்கிய குழுவொன்று அமைச்சர் மகேஸ்வரனோடு மேற்படி பிரதேசங்களுக்கு விஜயம் செய்யவுள்ளது.

இப்பிரதேசங்களில் இவ்வாறு இனங்காணப்பட்ட அடிப்படை வசதிக் குறைபாடுகளை உரிய அமைச்சுக்களினதும், நிறுவனங்களினதும் உதவியோடு சீர்செய்வதற்கான முயற்சிகளை அமைச்சர் மகேஸ்வரன் துரிதமாக மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## முதல் சமுர்த்தி வங்கி மாதகலில் திறப்பு

(கொழும்பு)
யாழ்.குடாநாட்டில் முதலாவது சமுர்த்தி வங்கி இம்மாதம் 17ஆம் திகதி மாதகலில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வலி தென்மேற்கு பிரதேச செயலக பகுதியில் அமையவுள்ள இச் சமுர்த்தி வங்கி மூலம் 28கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 7 ஆயிரம் பேர் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

## சீ-நோர் மீன் சந்தை சிரமதானம்மூலம் துப்புரவு

(யாழ்ப்பாணம்)
படையினர் விட்டகன்ற சீநோர் மீன் சந்தைப்பகுதியை குருநகர் மீனவர்கள் நேற்றுமுன்தினம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

மேற்படி மீனவர்கள், இச் சந்தையை மீண்டும் இயங்க வைக்கும் நோக்கில் தொழிலுக்குச் செல்லாது சிரமதானத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## ஆஸி. அணித் தலைவர் முரளிக்குப் புகழாரம்

(கொழும்பு)
முத்தையா முரளிதரனே சிறந்த சுழல் பந்துவீச்சாளர் என அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

முரளிதரனே சிறந்த சுழல் பந்து வீச்சாளர். அவரை எதிர்கொள்வது சாதாரண விடயமல்ல. ஊகத்தின் அடிப்படையிலேயே அவரை எதிர்த்தாட வேண்டியுள்ளது என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (உ-3)

## வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார நிதியுதவி

(தென்மராட்சி)
சமூக சேவைகள் திணைக்களம் யாழ்.குடா நாட்டிலுள்ள பெண்கள் தலைமையேற்றுள்ள குடும்பங்களுக்கும், வலதுகுறைந்தவர்களுக்கும் கால்நடைவளர்ப்பு, கோழி வளர்ப்பு, விவசாயம் மற்றும் சிறு வியாபாரம் செய்வதற்கும் நிதியுதவி அளிக்கவுள்ளது.

கால்நடைவளர்ப்பு, கோழி வளர்ப்பு, விவசாயத்துக்கு 11 ஆயிரம் ரூபாவும், சிறு வியாபாரத்துக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும் இவ்விதம் வழங்கப்படவுள்ளது.

இதேசமயம் யாழ். குடாநாட்டிலுள்ள பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இவர்கள் பற்றிய விபரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது. (உ-77)

பனை அபிவிருத்திச் சபையின்

## காட்சியறை நோக்கி கடற்படை படையெடுப்பு

(யாழ்ப்பாணம்)
கடந்தவியாழன் ஆரம்பமான பொங்கல் 2003 வர்த்தகக்கண்காட்சியில் பனை அபிவிருத்திச் சபையின் காட்சியறையில் பெருமளவு கடற்படையினரைக் காணமுடிந்தது.

அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த பனைசார் கைப்பணிப் பொருட்களை ஆவலுடன் பார்வையிட்ட கடற்படையினர் பெருமளவில் அவற்றைக் கொள்வனவு செய்வதிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை, உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்ட இடத்தில் பெருமளவு மக்கள் கூட்டம் அவற்றைப்பார்வையிடுவதற்காக காணப்பட்டது. (உ-6)

## பாராளுமன்ற செயலாளர் நியமிக்கப்படவில்லை

(கொழும்பு)
பாராளுமன்றச் செயலாளர் நாயகம் பதவிக்கு இதுவரை ஒருவரும் நியமிக்கப்படவில்லை.

இப்பதவிக்கான ஒருவரை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இதுவரை சிபாரிசு செய்யவில்லை என அரசியல் அமைப்புசபை குற்றம் சாட்டியுள்ளது.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்படும் ஒருவர் ஜனாதிபதியால் சிபாரிசு செய்யப்பட்ட பின்னர், அரசியல் அமைப்பு சபையினால் அங்கீகரிக்கப்படவேண்டும் இதன் பின்னரே ஜனாதிபதி நியமனத்தை வழங்க முடியும்.

இதேவேளை, 17 வது அரசியல் அமைப்பு திருத்த சட்டமூலத்துக்கு அமைய, ஆணைக்குழுவிற்கான நியமனங்கள் தொடர்பான சிபாரிசுகள் அரசியல் அமைப்பு சபையினால் ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளன. (உ-8)

## அபிவிருத்தி செய்வதற்கு 5 கிராமங்கள் தெரிவு

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியேற்ற அபிவிருத்திக்காக ஐந்து கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் இடம் பெற்ற பிரதேச மட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கக் குழுக் கூட்டத்தில் காரைநகர் வடகிழக்குக் கரையோரக் கிராமம் சாம்பலோடை நாரந்தனை, தெற்கு சூரியவத்தை, காரைநகர் தெற்கு கரையோர கிராமம் ஊர்காவற்றை வடக்கு கரையோரக் கிராமம் ஆகியன இதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் மேற்படி கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதி, மீளக்குடியமரும் மக்களின் வாழ்க்கைத் தரம் என்பன கட்டியெழுப்பப்படவுள்ளன. (உ-75)

## மரு. விளையாட்டு கழகம் யாழுக்கு சமாதானப் பயணம்

(கொழும்பு)
மருதானை கோல்ட் மைன்ட் விளையாட்டுக் கழகம் சமாதான சுற்றுலாவை மேற்கொண்டு தைப்பொங்கல் தினமான எதிர் வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளது.

இக்கழகத்தின் பிரதி தலைவர் இது பற்றிக் கூறுகையில், யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ள நாம் அங்குள்ள பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் பார்வையிடவுள்ளோம்.

அத்துடன், முஸ்லிம் அமைப்புக்களுடன் சிநேகபூர்வமான கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளோம் என்றார். (உ-10)

## பழுதடைந்த நிலையில் 37 பஸ் வண்டிகள்

(தென்மராட்சி)
வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் தற்போது மொத்தமாகவுள்ள நூறு பஸ் வண்டிகளில் 37 பழுதடைந்த நிலையில் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

வடபகுதிப் பொதுமக்களுக்கான திருப்திகரமான பஸ் சேவையை நடந்துவதற்கு சபைக்கு மேலும் 50 பஸ்வண்டிகள் அவசியம் தேவையாகவுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

இதே சமயம் சாரதிகள், நடத்துநர்கள் தொழில்நுட்பவியலாளர்கள் என 106பேருக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாத நிலையில் ஆளணிப் பற்றாக் குறையும் சபையில் நிலவுவது குறிப்பிடத்தக்கது. (உ-77)

## ஆயிரம் கைதிகளுக்கு நாளை விடுதலை

(கொழும்பு)
கடந்த நத்தார்தினத்தன்று விடுதலை செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்ட ஆயிரம் சிறைக் கைதிகள் நாளை விடுதலை செய்யப்படவுள்ளனர்.

பொது மன்னிப்பின் கீழ் இவர்களை விடுதலை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்த போதும் ஜனாதிபதி இதற்கு ஒத்துழைக்காமையால் கைதிகள் விடுதலை குறித்த விடயத்தில் இழுபறி நிலை தோன்றியது.

தற்போது இதற்கான இணக்கத்தை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிபார்சின் பேரில் ஜனாதிபதி தெரிவித்ததை அடுத்தே ஆயிரம் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர். (உ-8)

### தாதிகள் நியமனம்

(நவக்கிரி)
அச்சுவேலி அரசினர் வைத்திய சாலையில் மேலும் இரு தாதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இம்மாதம் முதலாம் திகதிமுதல் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர். (உ-233)

## யு என்.டி.பி நிதியுதவி

(தென்மராட்சி)
வன்னியில் இருந்து பண்டத்தரிப்பு பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு வியாபார முயற்சிகளைமேற்கொள்வதற்கு என யு.என்.டி.பி. நிறுவனம் 2 லட்சத்து 50ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. (உ-77)

## மர நிழலில் இயங்கும் அதிபர் அலுவலகம்

(தென்மராட்சி)
வடமராட்சி கிழக்கிலுள்ள கோறன்பற்று சீ. சீ. எம். ரீ பாடசாலையில் நிலவும் இட நெருக்கடி மற்றும் தளபாடப் பற்றாக்குறை காரணமாக அங்கு பயில்கின்ற மாணவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இங்கு தற்காலிகமாக அமைக்கப்பட்ட 60 அடி நீளமான கொட்டகையில் 140 மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கல்வி பயின்று வருகின்றனர்.

அதேசமயம், இப்பாடசாலை அதிபரின் அலுவலகம் அங்குள்ள மரநிழலில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## தனியார் பாரவூர்திகள் சங்கம் யாழ். அரச அதிபருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி சங்கம் பல இன்னல்களுக்கு மத்தியில் சேவையாற்றியுள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினால், அரச அதிபர் பத்மநாதனிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவித்திருப்பதாவது; யாழ். மாவட்டதனியார் பாரவூர்திச் சங்கம் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளிலும் இறங்கு துறையில் இருந்து பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டு வந்தது.

எமது சங்கம், கடந்த 2001 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 2 ஆம் திகதி யாழ். அரச அதிபர் செயலகத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படியே இதுவரையும் சேவையாற்றி வருகின்றது.

இவ்வாறு இருக்கையில் கடந்த 7 ஆம் திகதி பருத்தித்துறை இறங்கு துறை முகத்திற்கு சீமெந்து ஏற்றுவதற்காக எமது சங்கப் பாரவூர்திகள் அனுப்பப்பட்டபோது, இறங்கு துறைக்குள் செல்ல அவை அனுமதிக்கப்படவில்லை.

இதே வேளை, எமது சங்கத்தில் பதிவு செய்யப்படாத தனிப்பட்ட வர்த்தகர்களின் பார வூர்திகள் அனுமதிக்கப்பட்டிருந்தன இதனை எதிர்த்தே எமது சங்கம் மறியல் போரில் ஈடுபட்டது.

அத்துடன், எமது சங்கப் பாரவூர்திகள் காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் பொருட்களை ஏற்றி இறக்கும் பணியில் மாத்திரம் ஈடுபட்டு வருவதால் எமது பாரவூர்திகள் இச் சேவையில் தொடர்ந்தும் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது.

இதே வேளை, இப் பாரவூர்திகள் சங்கத்தில் சுமார் 350 ற்கும் மேற்பட்ட பாரவூர்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

# இந்து இளைஞர்கள் எழுச்சி கொள்வதற்காக முனைந்து செயற்பட்ட சுவாமி விவேகானந்தர்

## இன்று சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி தினம்

**க. காந்தரூபி**

இந்து மதத்தின் சீர் திருத்தவாதியும், இளைஞர் சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமுமாக சுவாமி விவேகானந்தர் விளங்கினார். எமது தொன்மையான இந்து சமயத்தை பாதுகாக்க வேண்டிய தேவை எம் தேச மக்களுக்கும், வளர்ந்து வரும் இளைஞர்களுக்குமே உரிய பொறுப்பு ஆகும் இற்றைவரை பலகினை நிறுவனங்களோடு 'சூரியனைப் போன்று என்றும் பிரகாசித்துக் கொண்டு' மக்களுக்கு சேவை செய்து கொண்டிருக்கும் நிறுவனமே ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனாகும்.

### கொழும்பு புளோரல் மண்டபத்தில்

சுவாமிஜி மேலைநாடுகளிலிருந்து திரும்பி கீழ்த்திசையில் ஆற்றிய சொற்பொழிவானது 1897 ல் ஜனவரி மாதம் கொழும்பு புளோரல் மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது இளைஞர்களை மையமாகக் கொண்டே சொற்பொழிவானது ஆரம்பமானது. 'எம் தேசத்தின் முதுகெலும்பு இளைஞர்களே, நாட்டின் முத்துக்கள் இளைஞர்களே... நீங்கள் எதற்கும் தூங்கிவிடக்கூடாது என் ஆருயிர் நண்பர்களே எம் கொள்கைகள் இடத்திற்கு இடம் காவிச்செல்லப்படுகிறது. இது மகோன்னதம் உண்மை. அவை எப்பொழுதும் காதைபிளக்கும் முரசின் முழக்கங்களோடும், போர்ப்படையின் அணிவகுப்புடனும் பரப்பப்பட்டன. இளைஞர்களே லட்சக்கணக்கான வேதனைக் குரலும், அநாதைகளின் அழுகையும் விதவையின் கண்ணீரும் கரைந்து ஓடின எம் நாட்டில் புனிதத்தைக் கெடுக்க வந்த நச்சுப் பாம்பைக் கண்டால் என் வீர இளைஞர்களே அவர்களை விரட்டி அடியுங்கள் என இளைஞர் சமூகத்திற்கு குரல் கொடுத்தார்.

### சமயம் பற்றி யாழ். இந்துக் கல்லூரியில்

விவேகானந்தர் சர்வ சமய மகாநாட்டில் கலந்துகொண்ட பின் தாய்நாட்டிற்குத் திரும்பி பின் கொழும்பு, யாழ்ப்பாணம், அனுராதபுரம், போன்ற இடங்களில் சொற்பொழிவாற்றினார். 24.01.1897 ல் 'சமயம்' என்னும் பொருள் பற்றி யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பேருரை நிகழ்த்தினார். அப்போது எம் மக்களிடம் தைரியமும், உற்சாகமும், முளைவிடத் தொடங்க வேண்டும் என்றால் அவர்களுடைய பொறுப்பு உங்களின் கைகளில் தான் இருக்கிறது என்று இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தார். வறுமை, மூடநம்பிக்கை, எமது சமுதாயத்தை விட்டு முற்றாக அகல வேண்டும் என்றால்

'எஃகு போன்ற தசையும் இரும்பு போன்ற நரம்பும் கொண்ட இளைஞர் சமுதாயமே' நாட்டிற்குத் தேவை. பாறைபோன்ற வலிமை படைத்த இளைஞர் சமுதாயம் இந்துத் தலைவர்கள் எமது நாட்டில் உருவாக வேண்டும் என வேண்டி நின்றார்.

என் ஞான வாரிசுகளே நம்முடைய வளங்களை திரும்பிப் பார்ப்போம் நாம் வலிமையானவர்கள் எதையும் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள், என நாம் நம்பிக்கை கொள்ளல் வேண்டும். எல்லாசக்தியும் எல்லாச் சுதந்திரமும், எல்லாத்தூய்மையும் என்னிடம் இருக்கிறது. அவற்றை ஏன் நாம் வெளிப்படுத்தப் பயப்பிடுகிறோம். நிச்சயம் வெளியில் வரும் மக்களே உங்கள் சிறுவர்களை சிறுவயதிலேயே வலிமை உடையவர்கள் ஆக்குங்கள். எமது பலத்தை தாக்க வரும் உயிர்க் கொல்லி நோயை எதிர்க்கும் சக்தியைக் கற்றுக் கொடுங்கள்.

### மூலசமயத்தின் பாதுகாப்பு

மீண்டும் மீண்டும் இளைஞர் சமூகத்திற்கும் இந்து சமயிகளுக்கும் கூறுகிறேன். பாரம்பரியமாகப் போற்றப்பட்டு வந்த மூலசமயமாகிய இந்து சமயத்தை அழிய விடாது பாதுகாக்க வேண்டிய தேவை உங்களுக்குத் தான் உண்டு. எந்தவொரு சைவ சமயியினாலும் முடியாத காரியம் ஒன்றில்லை இந்து சமயி ஒருவன் சமயத்திற்கு எதிராக நடந்து கொண்டால் வீரமறவனே கொதித்து எழுந்து தட்டிக் கேளுங்கள். அவர்களுடைய அறியாமை நிலையைப் போக்குங்கள் தட்டிக் கேளுங்கள் எமது உண்மை நிலையை எடுத்துக் காட்டுங்கள் பரம்பரை பரம்பரையாகப் போற்றப்பட்டு வந்த எம் சமயம் அதாவது முன்னோர்களினால் விதைக்கப்பட்டு வந்த பயிரானது இடையில் வரும் வெள்ளத்தினால் அள்ளுண்டு போகாமல் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு எம் சமூகத்தினருக்குரிய பொறுப்பு ஆகும்.

### யாழில் ஜெயந்தி விழா

சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி விழாவானது இம்முறை ஜனவரி மாதம் 12ம் திகதி தொடக்கம் 19ம் திகதி வரை யாழ். குடாநாடெங்கும் ஆன்மீக எழுச்சி வாரமாக கொண்டாடப் படுகிறது.

ஆகவே சுவாமிஜியின் வழி காட்டலில் பிறந்த மைந்தர்கள் நீங்கள் தாய் நாட்டின் அத்திபாரம். இவர் இளைஞர் மீது கொண்ட பற்றின் காரணமாக பலவாறு அடைந்தார். எமது கண்ணோக்கில் வீர மைந்தர்களே எழுந்து வாருங்கள்!

-தரிசனம்

---

# வானொலி சேவை நடத்த புலிகளுக்கு வழங்கிய அனுமதி ஜனநாயகத்தை உறுதி செய்துள்ளது

## பேராசிரியர் தம்மிக்க திஸ்ஸநாயக்க

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்.எம். வானொலி சேவையினை நடத்துவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அனுமதியினையும் உதவிகளையும் அளித்துள்ளமையானது அவர்களின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஓர் அம்சமாகும்.

இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் தம்மிக்க திஸ்ஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

வானொலி நிலைய ஆண்டு விழா நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகளின் வானொலி ஒலிபரப்புக்கு அரசாங்கமோ அல்லதுவேறொருநிறுவனமோ கட்டுப்பாடுகளை விதிப்பது என்பது நடைமுறை ரீதியில் சாத்தியப்படாது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வானொலிக் கருவிகளை வழங்குவது சம்பந்தமாக பல தரப்பட்ட அபிப்பிராயங்களில் பல கோணங்களில் இருந்து வருகின்றன.

அதேசமயம் நாட்டில் சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கி வளர்க்க ஊடகங்களும் ஒரு காரணிகளாக அமைகின்றன என்றும் சுட்டிக்காட்டினார். (உ-8)

### பொலிஸ் பாதுகாப்பு

(சுழமலை)

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கும் சுழிபுரம் வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபைக்கும் இரவு நேரத்தில் மானிப்பாய் பொலிசார் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

கடந்த மாத இறுதியில் இவ் இரு பிரதேசசபைகளின் பெயர் பலகைகள் சேதமாக்கப்பட்டதை அடுத்தே பொலிஸார் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

(உ-252)

### பொருளாதார பேராசிரியர் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

உலகப்புகழ் பெற்ற பொருளாதாரப் பேராசிரியர் ஜெசி பி சஷ் இரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 13 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

கொழும்பில் தங்கி இருக்கும் காலத்தில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவையும்பல அமைச்சர்களையும்சந்தித்து நாட்டின் இன்றையபொருளாதாரநிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார். (உ-8)

### நன்கொடை உறுதிச்சீட்டு

(சுழமலை)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள ஆனைக்கோட்டை, மானிப்பாய், பண்டத்தரிப்பு மாதகல் உப அலுவலகப் பிரிவில் 57 சனசமூக நிலையங்களுக்கு சென்ற வருடத்திற்குரிய பிரதேச சபையின் மூலதன நன்கொடைக்கான உறுதிச்சீட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் தலைமை அலுவலக ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் வைத்து பிரதேச சபைத்தலைவர் வெ. அ. ஜோன்சனால் வழங்கப்படஉள்ளது. (உ-252)

### கால்கோள் விழா

ஊர்காவற்றுறை சின்னமடு றோ.க.த.க பாடசாலையில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிக்கும் கால்கோள்விழா கடந்த வெள்ளியன்று அதிபர் க. சண்முகம் பிள்ளை தலைமையில் இடம் பெற்றது.

இம் மாணவர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பாடசாலை உபகரணப் பொதிகளை புளியங்கூடல் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஞா. செந்தமிழ்ச்செல்வன் வழங்கி கௌரவித்தார். (உ-75)

### வீதிப் போக்குவரத்து கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வாகன சாரதிகளுக்கான வீதிப்போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று மு.ப 9.30 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் பொலிஸ் அதிபர் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கான வீதிப் போக்குவரத்து விதிகள் பற்றி விளக்கமளிக்கப்படவுள்ளது. (உ)

---

# சலன சித்திரம் ஏற்பாட்டில் "கோகிலாம்பாள்" திரைப்படம்

## புதுவருடத்தன்று வெளியீடு

(தென்மராட்சி)

சலன சித்திரம் அமைப்பினால், தயாரிக்கப்பட்டு வரும் 'கோகிலாம்பாள்' முழுநீள வண்ணப்படம் சித்திரை புதுவருடப்பிறப்பன்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படும் என இப்படத்தின் இயக்குநரான சு.தேவதாசன் தெரிவித்துள்ளார்.

கடந்த 40 வருடங்களுக்கு முன்னர் குடா நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய கொலை ஒன்றினைத் தழுவலாகக் கொண்டு, தற்போதைய காலச் சூழலுக்கு ஏற்ப இப்படம் தயாரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இப் படத்தில் இடம்பெறும் நான்கு பாடல்களுக்கான ஒலிப்பதிவு, இசையமைப்பு என்பன பூர்த்தியாக்கப்பட்டு விட்டன எனவும், இப்பாடல்களின் ஒலிப்பேழை வெளியீடு இன்னமும் இரு வார காலத்தில் யாழ். வீரசிங்கம்மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது என இயக்குநர் தேவதாசன் குறிப்பிட்டார்.

அதேவேளை, இப்படம் தமிழ்மொழியில் தயாரிக்கப்பட்டுவருகின்ற போதிலும், ஆங்கிலம், சிங்களம், ஹிந்தி, பிரான்சு, ஜேர்மன் போன்ற மொழிகளிலும் வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்.

இப் படத்திற்கான படப்பிடிப்புகள்யாவும் குடாநாட்டிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதமிருக்க இப் படத்துடன் சேர்ந்து மேலும் மூன்று படங்கள் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (உ-77)

# 800 பேருக்கு மாத்திரம் குடியமர்வு கொடுப்பனவு

## ஏனையோர் அதிருப்தி

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் மொத்தமாக 16ஆயிரத்து 785குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும், 800 குடும்பங்களுக்கு மட்டுமே மீள்குடியமர்வுக் கொடுப்பனவாகிய15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய குடும்பங்களுக்கு மேற்படி கொடுப்பனவை வழங்குவதற்கான நிதி இன்னமும் வந்து சேரவில்லை எனக்கூறப்படுகின்றது.

இதேசமயம், மீளக்குடியமர்ந்துள்ள மீதி 15 ஆயிரத்து 985 குடும்பங்களுக்கும் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்படாமை குறித்து இப்பிரதேசத்திலுள்ள குடும்பங்கள் மிகவும் அதிருப்தியும் கவலையும் அடைந்துள்ளனர். (உ-77)

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### உடல் எண்–5 கூட்டு எண்ணாகிய உயிர் எண்–8

5,14,23,போன்ற திகதிகளில் பிறந்து திகதி,மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகிற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் புதன்,சனி, ஆதிக்கத்தில் பிறந்தவராவார். இவர்கள் பார்ப்பதற்கு சுமாரான உயரமுள்ளவராகக் காட்சியளிப்பர் .இயற்கையில் மனத்திடம் பெற்ற இவர்கள் தான் எந்தக் காரியத்தில் இறங்கினாலும் செய்து முடிக்கும் வரை அயராது உழைப்பர். சிலர் ஆரம்பத்திலேயே வசதி படைத்தவர்களாகவும் இன்னும் சிலர் இளமையில் இருந்து போராடித் தன் தனித் திறமையால் உயர்ந்த நிலைக்கு வருபவராகவும் இருக்கின்றனர்.

### முன்னேற்றத்தில் முனைப்பு

பொதுவாக உத்தியோகத்தில் உள்ளவர்கள் கூட பெரும்பணம் சம்பாதிக்கும் திட்டங்களைப் போட்டும் தன் வருமானத்தை உயர்த்த வழி தேடுவர். பெயர் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமையப் பெற்றவர்கள தொழிலாலும், உத்தியோகத்தாலும் உயர் நிலையை அடைந்து வீடு,வாகனம், நிலம் போன்ற அனைத்து வசதிகளும் பெற்று வாழ்கின்றனர்.ஆனால் பெயர் பொருத்தமின்றி அமையப் பெற்றவர்கள் வாழ்க்கையில் ஏறவும் இறங்கவுமாக இருக்கின்றனர். இதனால் தனது பெயரைப் பிறந்த திகதி எண்களுக்குப பொருத்தமானதாக அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இந்த எண்ணிக்கைக்காரர்கள் இயற்கைக்காட்சிகளையும்,புதுமையான தொழில் கூடங்களையும் கண்டு களிப்பதில் ஆர்வம் உள்ளவர்கள். இவர்கள் எங்கு சென்றாலும், எந்த ஒரு புதிய பொருளைப் பார்த்தாலும் அதைப் பற்றி ஆராய்ந்து ருசித்துக் கொண்டிருப்பர்.இரும்பு சம்பந்தமான பொருள்கள் அனைத்தும் இவர்கள மனதைக்கவரும்.தன் வாழ்க்கையில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற குறிக்கோளோடு அயராது உழைத்துக் கொண்டிருக்கும் இவர்கள் வாழ்க்கையின் உச்சஸ் தானத்தை அடைவர். இவர்களை Mechanical Mind man என்று அழைத்தால் பொருந்தும். இவர்கள் யாரும் புரிந்துகொள்ள முடியாத ஒரு புதிராக விளங்குவர்.

பலருக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்ட இவர்கள் தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவுவர். ஆனால் முடியாத காரியத்தை முடியும் என மிகைப்படுத்திக் கூற மாட்டார். எல்லோரும் இவரை விசயமானவர் எனக் கூறுவர். சாதாரண மனிதராக இருந்தால் கூட இந்த எண்ணிக்கைக்காரர்கள் பலர் போற்றும் மனிதராக வாழும் வாய்ப்புள்ளது. ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் அவர்கள் நினைக்கின்ற திட்டம் மெல்லாம் நடைபெறாது. இதனால் பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

### பிறர் நலமும் பேருழைப்பும்

பிறருக்காக எந்தக் காரியத் திலீடு பட்டாலும்,தைரியமாகச் செயல் பட்டு, வெற் றியைத் தேடிக் கொடுப்பர், ஆனால் தனக்கென்று ஒரு காரியத்தில் இறங்கும் போது சிறிது மனம் குழம்புவர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்து விடுமேயானால் பல விஷயங்களில் வெற்றியே பெறுவர். தொழில் செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர்கள்,தான் பெரிய தொழிலைச் செய்து பெரும் பணம் ஈட்ட வேண்டும் என்று ஓடோடி உழைப்பர். உத்தியோகம பார்க்கும் சிலர் தன்வருமானம தனக்குப் போதவில்லை யென்று வேறு ஏதாவது தொழில் செய்து பொருளீட்ட ஆர்வமாக இருப்பர்.

சட்டம், சமயம், கணிதம், சோதிடம், கலை போன்றவற்றில் இவர்களுக்கு ஆராய்ச்சி இருக்கும். தூர தேசப் பயணங்களை மேற் கொள்ளும் இவர்கள் ஒவ்வோர் இடத்தில் என்ன பொருள் கிடைக்கிறது. அதை நாம் வியாபாரம் செய்து பொருளீட்ட முடியுமா? என்று சிந்தனை செய்வர். எப்பொழுதும் சுறு சுறுப்பாக இருக்கும் இவர்கள் ஓய்வெடுக்க நினைத்தால் முழுச் சோம்பேறி போல இருப்பர் என்றும் இவர்களுக்கு ஆண்டவன் அருள் உண்டு. எல்லாப்பழக்க வழக்கங்களை யும் பழகி அனுப வித்து விட்டு விடுவர். பொதுவாக இந்த எண்ணிக்கைக் காரர்களுக் குப் பிறந்த திகதிக்குப் பொருத் தமானதாகப் பெயர் அமைந்து விட்டால் எல்லாவிதமான வளமும் பெற்றுச் சுகமான வாழ்க்கையை அனுபவிப்பர்.

### தொழில்

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு இரும்பு,தங்கம்,வெள்ளி சம்பந்தமான அனைத்துத் தொழி லும் உகந்தவையே. அத்துடன் கமிஷன், கண்ட்ராக்ட், மின்சாரம், வாகனம சுமந்தமான தொழில் அனைத்தும் வெற்றி அளிக்கும்.

### நோய்

புதன் ,சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு வயிற்றுக்கோளாறு, முதுகுவலி,மூட்டு வலி, கண்,காது வலி இரத்தக் கொதிப்பு மூல வியாதி போன்றவைகள் வந்து நீங்கும்.

### பெயர் அமைக்கும் முறை

புதன் ,சனி ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு சுக்கிரன்,புதன் ஆதிக்கமான 6,15,24,33,42,60,69, 14,23,32,41, 50,59,77 போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

### பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-5,6,1, யோகமான திகதிகள்-5,14, 23,6,15,24, 1,10,19,28, யோகமான மோதிரக் கல்- வைரம் ஜீர்கான், யோகமான நிறம்,நீலம்,சாம்பல் நிறம், ஆகாத நிறம் கறுப்பு,சிவப்பு ஆகாத திகதிகள்- இல்லை

### உடல் எண் – 5 கூட்டு எண்ணாகிய உயிர் எண் – 9

5,14,23 போன்ற திகதிகளிற் பிறந்து திகதி, மாதம், வருடம் இம் மூன்று எண்ணையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 9 வருமேயானால் இவர்கள் புதன செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவராவார். இவர்கள் பார்ப்பதற்குக் கம்பீரமாகவும், பல மக்களுக்குத் தலைவராகவும் விளங்குவர். இவர்களைப் பார்க்கின்ற போதே பிறர் அஞ்சும் அளவிற்குக் காட்சியளிப்பர். மனத்திடமும், உடற்பலமும் கொண்ட இவர்கள தான் நினைத்ததைச் செய்து முடிக்கவேண்டுமென்று உறுதியாகச் செயற்படுவர். தன்னை நம்பி உள்ளவர்களுக்குத் தலை வனாகவும், தன்னை எதிர்ப் பவர்களுக்கு பலமான எதிரியாகவும் விளங்குவர். எந்தக் காரியத்தையும் என்னால் செய்து முடிக்க முடியும் என்று மார் தட்டிக் கூறுவர். இதனால் இவர்களை எல்லோரும் மதிப்போடு மனத்திடமான மனிதர் என அழைப்பர்.

### வாழ்க்கைப் போராட்டம்

இவர்களுடைய பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமைந்து விட்டால் வாழ்க்கையில் பல்வேறு வழிகளில் முன்னேற்றம் அடைவர். பல மக்களுக்கு உதவுவதன் மூலம் தான் ஒரு பெரிய மனிதன் என்ற ஸ்தானத்தை அடைவர். எக்காரியத்தில் இறங்கினாலும் அதில் இரகசியமான வருவாயைத் தேடிக்கொண்டே செல்வர். பலருடைய பிரசசினைகளைத் தீர்த்து வைப்பதாலும், குறுக்கு விசாரணை செய்வதாலும், வழக்குத் தொடுப்பதாலும் புகழடைவர். ஒரு சாரார் இவர்களைப் பார்த்து (Cunning man) சூழ்ச்சிக்காரர் என்றும், மற்றொரு சாரார் பொதுமக்களின் உபகாரி என்றும் அழைப்பர்.

இவர்களின் வாழ்க்கை போராட்டத்திலேயே உயர்ந்து கொண்டு செல்லும். பல ஆபத்துக்களைக் கடந்து கொண்டே செல்வர். பரோபகாரமான செயல்களினால் மற்றவர்கள் இவர்களை அனுபவசாலி என்று புகழ்வர். வஞ்சகர்களும், ஏமாற்றுக்காரர்களும், நல்லவர்களும், பெரும் தொழில் அதிபர்களும் இவர்களைச் சூழ்ந்திருப்பர். இவர்கள் எப்போதும் சிந்தனை செய்து கொண்டேயிருப்பர். இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமை யுமேயானால் நாளுக்கு நாள் முன் னேற்றம் அடைந்துகொண்டே செல்வர். வீடு, வாகனம், நிலம் போன்ற அனைத்து வசதிகளும் பெற்றுச் செல்வச் சீமானாக வாழ்வர். ஆனால், பெயர் பொருத்தமன்றி அமையுமே யானால் பல் வேறு பிரச்சினைகளைச் சுமந்துகொண்டு அலைந்து திரிவர்.

### சுறுசுறுப்பானவர்

இவர்கள் மனம், சட்டம், சாஸ்திரம், கை நுணுக்கத் தொழில், சங்கீதம் போன்றவற்றை ஆராயும், அத்தோடு இரசாயனம், வைத்தியம் போன்றவற்றில் ஆர்வம் இருக்கும். திடீர் திடீரென்று புதுப்புதுக் கருத்துக்கள் மனதிலே தோன்றும். ஆரம்ப வாழ்க்கை சிலருக்கு சிரமமானதாக இருந்தாலும் வயது ஏறஏற நல்ல முன்னேற்றத்தையும் அனுபவத்தையும் பெறுவர். எப்போதும் சுறு சுறுப்புடன் காட்சியளிக்கும் இவர்கள் சில நேரங்களில் முழுச்சோம் பேறியாகிவிடுவர். பிறருக்கு ஊக்கம் கொடுப்பதில் கைதேர்ந் தவர்களான இவர்கள் தனக்கு வரும் கஷ்டத்தைப் பிறரிடம் கூறாது தானாகவே தைரியப்படுத்திக் கொள்வர்.

கமிஷன் மூலம் அதிகப் பொருளீட்டும் பாக்கிய முள்ளவர்களாதலால் செலவு செய்யும் போது தாராளமாகச் செலவு செய்வர். பணம் இல்லாதபோது தனிமையில் இருந்து வருந்துவர். இவர்களுக்குப் பெயர் பொருத் தமானதாக அமையுமேயானால் எல்லா வளங்களையும் பெறுவதோடு ஆண்டவனின் அருளும் கிடைக்கும். ஆனால், பெயர் பொருத்தமின்றி அமையுமேயானால் இயற்கையிலேயே பெண்ணாசை கொண்ட இவர்கள் காமுகர்களாக மாறிவிடுவர். இதனால் பெயரைத் தனது பிறந்த திகதிக்குப் பொருதத மானதாக மாற்றிக்கொள்வது அவசியம்.

### தொழில்

இந்த எண்ணிக்கைக் காரர் களுக்கு கமிஷன், கண்ட்ராக்ட், ஏஜென்சீஸ், வழக்குத் தீர்த்து வைத்தல் போன்றவற்றிலும் இரும்பு, மெற்றல், மருந்து சம்பந்தமான தொழிலாலும் பிறரை மகிழ்விக்கும் தொழிலாலும் முன்னேற்றம் காண்பர்.

### நோய்

இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு இரத்தக் கொதிப்பு, இருதய வியாதி, சர்க்கரை வியாதி, மூட்டு வலி, முதுகுவலி,நரம்பு சம்பந்தமான நோய்கள் வர வாய்ப்பிருப்பதால் தனது பெயரைப் பிறந்த திகதிக்குப் பொருத் தமானதாக அமைத்துக் கொண்டு நோயிலிருந்து விடுபடலாம்.

**ஆர்.ஐ.துரைமுருகர்**

### பெயர் அமைக்கும் முறை

புதன் ,செவ்வாய் ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு புதன், செவ் 50,59,77,27,36,45 போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்வது சிறப்பாகும்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண் -5,9 யோகமான தேதிகள் -5, 14, 23, 9, 18, 27, 6, 15, 24, 3, 12, 21, 30 யோக மான நிறம் -சிவப்பு, சாம்பல் நிறம். யோகமான மோதிரக்கல் -வைரம், ஜிர்கான், பவளம், ஆகாத திகதிகள்-2, 11, 20, 29, 7, 16, 25 ஆகாத நிறம்- பச்சை மட்டும்.

(தொடரும்)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மூன்றாம் நிலைக் கல்வி அமைசசினால் இந்திய பொது நல வாயபட்டப்பின் படிப்பு புலமைப் பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னராக செயலாளர்,மூன்றாம் நிலைக்கல்வி, பயிற்சி அமைச்சு, உயர்கல்விப் பிரிவு,18,வோட் இடம்,கொழும்பு 07 என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். (உ-3)

## நூல் நிலைய திறப்பு விழா

(கோப்பாய்)

கோப்பாய் மகா வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட வைத்திலிங்கம் ஞாபகார்த்த நூல் நிலைய திறப்பு விழா எதிர் வரும் 14ஆம் திகதி செவ்வாய்கிழமை மு.ப.10.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் அ. அகிலதாஸ் தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக லண்டனை வதி விடமாகக் கொண்ட சு.ஸ்கந்ததேவாவும் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.சிவஞானசுந்தரம் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, இ.விஜயகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-77)

## முருகண்டி ஆலயச் சூழல் அபிவிருத்தி

(கொழும்பு)

இலங்கையின் சகல இனங்களின் வழிபாட்டுத்தலமாகவும் யாத்திகர்களின் பிரதான தரிப்பிடமாகவும் விளங்கும் முருகண்டி பிள்ளையார் ஆலய சுற்றாடலை அபிவிருத்தி செய்ய துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்து கலாசார அமைச்சும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து இவ் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. (உ-3)

## தரம் 1 மாணவர்களுக்கு இலவச சீருடை

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் தரம் ஒன்றில் அனுமதிக்கப்படுகின்ற மாணவர்களுக்கும் இலவச சீருடை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (உ-3)

## இளைஞர் மரணம்

(கிளிநொச்சி)

வீட்டில் இருந்த வேட்டைத்துப்பாக்கி ஒன்று தவறுதலாக வெடிததில் தர்ம புரத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் மரணம் அடைந்துள்ளார்.

தர்மபுரம் முதலாம் யூனிற்றைச் சேர்ந்த சோமு குமாரசாமி (வயது 26)என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். (உ-10)

## யாழ். பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவருக்கான அனுமதி ரத்து

(கொழும்பு)

முஸ்லிம் மாணவர்களை யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள நிலைமைகளில் முஸ்லிம்கள் அங்கு சென்று கல்வி கற்பதில் உள்ள அசௌகரியங்கள் குறித்து சம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர் அமைச்சர் அதாவுல்லாவுக்கு எடுத்து விளக்கியுள்ளனர்.

இதனையடுத்து அமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர்ஹாசிம், மனிதவளம், கல்வி கலாசார அமைச்சர் கருணாசேனா ஆகியோரைச் சந்தித்துப் பேசிய போது இதற்கு இணக்கமான பதில் வழங்கப்பட்டுள்ளது (உ-8)



யாழ். வந்த ஜேர்மன் நாடகக் குழு

## ஜேர்மன் நாடகக் குழுவின் ஆற்றுகைக்கு நல் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

ஜேர்மன் நாடகக் குழுவின் ஆற்றுகையைக் காண நேற்று முன் தினம் யாழ் வீரசிங்கம் மண்டபத்திற்கு பெருமளவு கலா ரசிகர்கள் கூடினர்.

தமிழ் ,சிங்கள, முஸ்லிம், ஜேர்மன் கலைஞர்கள் இணைந்து நிகழ்த்திய கண்ணுக்குத் தெரியாத சுவாமௌன ஆற்றுகை மற்றும் சிறப்பு நிகழ்ச்சியான மேற்படி ஜேர்மன் நாடகக் குழுவின் கனவுப் பெட்டகம், கறுப்பு அரங்க நிகழ்வு ஆகியன பார்வையாளர் மத்தியில் நல்ல வர வேற்பு பெற்றன.

அத்துடன் இக் குழுவின் இசை நிகழ்வில் சமாதானத்தை வலியுறுத்தும் பாடல்கள் ஒலித்தமை குறிப்பிடத் தக்கது. (உ-6)

## வெட்டுப்புள்ளியால் பாதிப்புற்றவர்களுடன் இன்று ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

2002-2003 (4) கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிக்கான பாதிக்கப்பட்ட கணித, விஞ்ஞான, வர்த்தக, கலைப்பிரிவு மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான முக்கிய ஒன்று கூடல் ஒன்று புதிய விஞ்ஞான கழகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு நடை பெறவுள்ளது.

எதிர் காலத்தில் மேற் கொள்ளப்படும் சட்ட நடவடிக்கை சம்பந் தமாக இதில் ஆராய இருப்பதால் தவறாது அனைவரையும் சமூக மளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

## இன்று ஒரு தகவல்

## தமிழ்த்தாத்தா உ.வே.சா

1887ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஒரு முக்கியமான நாள் - ஆவணி அவிட்டம்- கும்ப கோணம் கல்லூரியில் ஒருவாரம் விடுமுறை. அந்த விடுமுறையைப் பயனுள்ள வகையிலே பயன்படுத்தவேண்டும் என்று நினைத்தார் ஒருவர். திருநெல்வேலி பக்கம்போய் பழைய ஏட்டுச் சுவடிகளைத் தேடலாம் என்று நினைத்தார் அவர். நெல்லைப் பகுதியிலே பரம்பரை வித்துவான்களின் வீடுகளில் பத்துப்பாட்டு ஏடுகளைத் தேடலாமென்று முடிவு பண்ணினார். அவரின் அப்பாவோ ''சிராவணத்துக்கு இங்கே இருக்க வேண்டாமா? இந்த நேரத்தில் வெளியூருக்குப்போக வேண்டுமா?'' என்றார். ஆனால் இவரோ, இதை விடப் பத்துப்பாட்டுத் தான் முக்கியம் என்று நினைத்தார். அப்பாவிடம் ஏதோ சமாதானம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார். ஒரு ஒற்றை மாட்டு வண்டியிலேறி ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகிறார். பாதி வழியிலே வண்டி குடை சாய்கிறது. இவர் கீழே விழுகிறார். இவர் மேல் தகரப் பெட்டி விழுகிறது. இதற்காகப் பயணத்தை நிறுத்தவில்லை.

ரயிலில் ஏறினார். ரயில் புறப்பட்டது. தஞ்சாவூர்தாண்டிப் போய்க்கொண்டிருக்கிறது. அப்பொழுது திடீரென்று பாதிவழியில் அதுவும் நின்றது. இவர் என்ன விஷயம் என்று எட்டிப்பார்த்தார். ஒரு அதிகாரி வேகமாக வந்து, 'கிழே இறங்கி வேறு பெட்டியில் ஏறிக் கொள்ளுங்கள்'' என்றார். முன்னாலுள்ள பெட்டியில் தீப்பிடித்துவிட்டதாம் அதற்குத் தான் அப்படிச் சொல்லியிருக்கிறார். இவர் கீழே இறங்கி வேறு பெட்டியில் உட்கார்ந்து கொண்டார். ஒருவாறு ர்யில் திருநெல்வேலிக்குப் போய்ச் சேர்ந்தது.

இப்படியாக விடாப்பிடியாக இருந்து தமிழ் இலக்கியங்களை நமக்குத் தேடிக் கொடுத்தவர், தமது தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதஐயர்தான். நாமாக இருந்தால், ஒற்றை மாட்டுவண்டி குடைசாய்ந்தபோதே நேரம் சரியில்லை என்று சொல்லி வீட்டுக்குத் திரும்பியிருப்போம்.

கும்பகோணம் கல்லூரியிலே ஒருநாள் 1900ஆம் வருஷம், மேமாதம் இரண்டாம் திகதி இளங்கலை மாணவர்களுக்கு இவர் தமிழ்ப்பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார். அப்போது ஒரு மாணவன் எழுந்து இவரிடம் ''ஐயா! எங்கள் விடுதிக்கு ஒருவர் வந்திருக்கிறார். முன்னர் வசதியாக வாழ்ந்தவர். இப்போது வறுமையில் இருக்கிறார். கடன் சுமை அதிகம். கடன்காரர்களுக்குப் பயந்து கொண்டு இப்போது தலைமறைவாக இருந்து கொண்டிருக்கிறார். அவர் ஒரு பெரிய துண்டுமூட்டை ஒன்று வைத்திருக்கிறார். அதிலே பழைய தமிழ்ச் சுவடிகள் நிறைய இருக்கின்றன. நூறு சுவடிகளுக்கு மேல் இருக்கும். அவ்வளவையும் அவர் அன்பளிப்பாகக் கொடுப்பதற்கு வந்திருக்கிறார். அவர் தனக்குப் பணம் எதுவும் வேண்டாம். இதைப் பாதுகாத்தால் போதும் என்றார் என்று சொன்னார்.

தமிழ்த்தாத்தாவுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி! உடனே நேரில் போய் அதை வாங்கிக் கொள்ள வேண்டுமென்று நினைத்தார். ஆனால் அந்த மாணவர் தானே போய் அந்தச் சுவடிக் கட்டுகளை எடுத்துக் கொண்டு வந்து தன் ஆசிரியரிடம் கொடுத்தார். சுவடிதந்த அந்தப் பெரியவரைப் பார்க்காமல் இந்தால் அது பெரிய பாவம் என்று சொல்லி உடனே விடுதிக்குப் போனார் உ.வே.சா. ஆனால், அதற்குள் அந்தப் பெரியவர் தன்னுடைய பெயரையோ, ஊரையோ யாரிடமும் சொல்லாமல் போய்விட்டார். அவரைப்பார்க்க முடியவில்லையே என்று தமிழ்த்தாத்தாவுக்கு மிகவும் வருத்தம். அது யாரென்பது இதுவரையும் யாருக்குமே தெரியாமல் போய்விட்டது. ஆனால் அந்தச் சுவடிகளை வாங்கிக்கொண்டு வந்து கொடுத்த மாணவர் பெயர் சாம்பசிவச்செட்டியார் என்று உ.வே.சா. சொல்லியிருக்கிறார். 'தமிழ் விடு தூது' அந்தச் சுவடிக் கட்டிலேதான் இருந்ததாம்.

இந்தக் காலத்து எழுத்தாளர் ஒருவர் தன் மனைவியைக் கூப்பிட்டு உட்காரவைத்து இவ்வளவு விபரங்களையும் சொன்னார். அந்த அம்மாவும் பொறுமையாகக் கடைசி வரையும் கேட்டுக் கொண்டிருந்தார். ''அபூர்வமான சுவடிகளை அழியாமல் காப்பாற்றி இலக்கியத் திற்கு பெரும் சேவை பண்ணினவர் அந்தப் பெரியவர். அதுமாதிரி நாமும் நம்மாலே முடிந்த சேவையை பண்ண வேண்டும்'' என்றார் அந்த எழுத்தாளர் தன் மனைவியிடம்!

அதற்கு அந்த அம்மா ''சில சுவடிகளை அழியாமல் காப்பாற்றினால் அது சேவை! சில சுவடிகளை அழித்து விட்டால் அது தான் சேவை! அப்படிப்பட்ட பெரிய சேவையை இலக்கிய உலகத்துக்கு நான் இன்றைக்கும் செய்து கொண்டிருக்கிறேன்'' என்றார். அப்படி என்ன பண்ணுகின்றாய்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார் எழுத்தாளர்.

நீங்கள் தினமும் எழுதி மலையாகக் குவித்து வைப்பதையெல்லாம் நான் அவ்வப்பொழுது எடுத்து அடுப்பு எரிக்க உபயோகப் படுத்துகிறேன்! இலக்கிய உலகத்துக்கு இதைவிடப் பெரிய சேவை நான் எதனைப் பண்ணிவிட முடியும்?'' என்றார் அந்த அம்மா.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# டெங்குக் காய்ச்சலை ஒழிப்பதற்கு நாம் விழிப்புடன் செயற்படுவோம்

டெங்குக் காய்ச்சல் வைரசினால் ஏற்படும் நோயாகும். எமது பகுதி களிலும் இது பரவும் அபாயம் தோன்றியுள்ளது.

ஈடிஸ் எயிப்டிஜ, எடிஸ்எஸ்போபிக் டஸ் எனும் இருவகை நுளம்புகள் மனிதனைக்கடிப்பதால் இந்நோய் உண்டாகிறது.

### நோயரும்பு காலம்

இந்நோய்க்கான நோயரும்பு காலம் 2-7 நாட்களாகும். காய்ச்சல் வந்த ஒருவருக்குக் கடித்து இரத் தத்தை உறுஞ்சிய நாளிலிருந்து 8-12நாட்களின் பின்பே இன்னொ ருவருக்கு தொற்றை ஏற்படுத்தக் கூடிய கிருமியைத் தன்னக்தே கொண்டிருக்கும். டெங்குபரப்பும் நுளம்புகள் பகல் வேளைகளில் தான் கடிக்கும், அதிலும் காலை, மாலை வேளைகளிலேயே கடிக்கும.

### கடும்காய்ச்சல்

- ★தலைவலி
- ★வாந்தி
- ★உடல்வலி
- ★வயிற்றுளைச்சல்

போன்றவை டெங்கு நோயின் அறிகுறிகளாகும்.

மூன்று நான்கு தினங்களில் இந்நோயின் அறிகுறிகள் குறைந்து நோய் குணமாகும். எனினும் சிலருக்கு டெங்கு குருதிப்பெருக்கு நோயின் நிலை தோன்றும்.

### டெங்கு குருதிப் பெருக்குக் காய்ச்சலின் அறிகுறிகள்

சாதாரண டெங்குக்காய்ச்சலுக் கான அறிகுறிகளுடன் தோலின் அடியில் சிறிய இரத்த(சிவப்பு) அடையாளங்கள்,

- ★கண்கள் சிவப்பு நிறமாதல்
- ★மூக்கினால் இரத்தம் கசிதல்
- ★மலசலத்துடன் இரத்தம் வெளி யேறுதல்
- ★வாந்தி அல்லது மலம் கறுப்பு (செம்பட்டை) நிறமாதல்
- ★வயிற்றுளைவு

இவ்வாறான நோயின் அறிகுறி கள் காணப்படுமாயின் உடனே வைத்திய சாலையிலிருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். இந் நோயின் அபாய நிலை டெங்கு அதிர்ச்சி நிலையாகும். விசேடமா கக் காய்ச்சலினால் பீடிக்கப்பட் டுள்ள ஒரு பிள்ளையின் காய்ச்சல் திடீரென இறங்குமெனின் அவதா னமாக இருங்கள். சாதாரணமாக அஸ்பிறின், டிஸ்பிறின் கலக்கப்பட்ட மருந்து வகைகள் பாவிக்க வேண்டாம். சரியான அளவு பனடோல் பாவிக்கவும். ஆனால் ஒரு நாளைக்கு நான்கு தடவைக்கு மேல் பாவிக்க வேண்டாம்.

### டெங்குக்காய்ச்சலை வருமுன் காப்போம்

டெங்குக் காய்ச்சலைத் தடுத்துக் கொள்ள அதைப்பரப்பும் நுளம்புகள் உண்டாவதைத் தடுக்க வேண்டும். இது வைரஸ் நோயாக இருப்பதால் பிரத்தியேக சிகிச்சை முறைகளோ தடுப்பு மருந்துகளோ இல்லை. எனவே நுளம்பு உற்பத்தியைத் தடுத்துக் கொள்ளக் கீழ்வரும் நடவடிக்கை களைக் கடைப்பிடியுங்கள்.

★ வெற்றுற்றின்கள், சிரட்டைகள், கோம்பைகள், பிளாஸ்ரிக் பாத்தி ரங்கள், பொலித்தீன் பைகள், பழைய ரயர்கள் ஆகியவற்றில் நீர் தேங்காது புதைத்தோ அல்லது அழித்தோ அப்புறப்படுத்திவிடுங்கள்

★ பூச்சாடிகள், எறும்புப் பொறிகள் ஆகியவற்றுள் சேரும் நீரை அடிக் கடி மாற்றுவதுடன் உப்புக்கட்டி போட்டு விடுங்கள்.

★ பறவைகள், வளர்ப்பு மிருகங் களுக்கு நீர் அருந்த வைக்கும் பாத்திர நிரை அடிக்கடி மாற்றிவிடுங்கள்.

★ ரயர் கடைகளில் உள்ள தண்ணீத் தொட்டியில் உள்ள தண்ணீரைக் கிரமமாக மாற்றவும்.

★ வீட்டுக் கூரைகளில் குப்பை கூழங்கள் தேங்கி நீர் தேங்காத வாறு அடிக்கடி துப்புரவு செய்து அகற்றிவிடுங்கள்.

★ குடிநீர்ப்பாவனை, ஏனைய பாவ னைநீர்த்தொட்டிகள், அரிசி ஆலைப் பகுதியில் நெல் ஊறவைக்கும் தொட்டிகள் ஆகியவற்றில் இருக் கும் தண்ணீரை கிரமமாக மாற்றி விடுங்கள்.

★ உடைந்த நிலையில் காணப்ப டும் மலகூடக்குழிகள் மூடப்பட வேண்டும்.

## கடன் அட்டை மூலம் 7 கோடி பண மோசடி

(கொழும்பு)

பேருவளை பகுதியில் அண்மை யில் கடன்அட்டை மூலம் பெருமளவு மோசடி செய்த சம்பவம் குறித்து புலனாய்வுப் பிரிவினர் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

7கோடி ரூபா பணத்தை இவ்வாறு கடன் அட்டை மூலம் மோசடி செய் துள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விசாரணை களை மேற்கொண்டுள்ள புலனாய் வுத்துறையினர் இது வரை 10 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய் துள்ளனர். (உ-10)

## இராசி பலன்

**12. 01. 2003**

**(மார்கழி 28, ஞாயிறு)**

நவமி மு.ப 11.17வரை
அச்சுவினி காலை 6.38வரை
இராகுகாலம் - 5.03 - 6.33
சுபநேரம் - 9.33 - 11.03

**மேடம்**
முயற்சி கைகூடும், போசன சுகம், பெரியோர் சந்திப்பு, தெய்வ சிந்தை

**இடபம்**
உணர்ச்சிவசப்படல், காரிய அலைச்சல், பிதா சிந்தை. பொருள் விரயம்

**மிதுனம்**
நினைத்த காரியம் கைகூடும், தனலாபம், கௌரவமான நிலை, குடும்ப மகிழ்ச்சி.

**கடகம்**
தொழில் முயற்சி, நல்ல சம்பவம், சுபநிகழ்ச்சி, நல்ல செய்தி

**சிங்கம்**
கட்டுப்பாடு, அமைதிக்குறைவு, புதிய சிந்தனை, முயற்சி தாமதம்.

**கன்னி**
எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், உறவினர் வெறுப்பு, உடல் நலக்குறைவு

**துலாம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், போசன சுகம்.

**விருச்சிகம்**
மனமகிழ்ச்சி, ஆரோக்கியம், சுவாரஸ்யம், பொருள் சேர்க்கை

**தனுசு**
குடும்பக் கவலை, சிறுவியாதி, காரிய இடையூறு, சயனசுகக்குறைவு

**மகரம்**
தன்னம்பிக்கைக் குறைவு, அற்பர் நேசம், முயற்சி தாமதம், பயந்த சுபாவம்

**கும்பம்**
இனிய சம்பவம், சென்ற இடத்தில் செல்வாக்கு, நல்ல செய்தி, தனவரவு

**மீனம்**
வாக்குக் கலகம், முயற்சி தாமதம், உறவினர் சந்திப்பு, பணச்செலவு

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்

## மாணவர் அனுமதிக்கு பாடசாலைகள் பண வசூல்

### எதிர்ப்பு நடவடிக்கை ஆரம்பம்

(சுதுமலை)

மாணவர்களை அனுமதிப்ப தற்கு பணம் வசூலிக்கும் பாட சாலைகளுக்கு எதிரான பிரசார நடவடிக்கை ஒன்றினை ஆனைக் கோட்டை றோ.க.த.க.பாடசாலை பழைய மாணவர்கள் ஆரம்பித்துள் ளனர்.

கடந்த புதன்கிழமை தொடக்கம் மானிப்பாய், நவாலி, சுதுமலைப் பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் இப் பிரசார நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. (உ-252)

### பெப்ரவரி 27இல்

## யாழ். நிலையை அறிய அனான் நேரில் விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையில் செய லாளர் நாயகம் கோபி அனான் பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி இலங்கை வரவுள்ளதாக வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரசார மற்றும் தவல் பிரிவு உதவிப் பணிப்பாளர் ஹசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை வரும் ஐ.நா செயலா ளர் நாயகம் 27ஆம் திகதி யாழ்ப் பாணம் விஜயம் செய்து இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிய வுள்ளார்.



இவர் ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல முக்கிய தலைவர்களைச் சந்திக்கவுள்ளதுடன் புலிகள் இயக்கத் தலைவர்கள் எவரையும சந்திப்பதற்கான ஏற்பாடுகள் இல்லை எனவும் வெளிநாட்ட அமைச்சு கூறியுள்ளது. (உ-3)

## வெடிப்பொருட்கள் அகற்றும் பணிக்கு சொற்ப நிதி கூட ஒதுக்கப்படவில்லை

### மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு

(கிளிநொச்சி)

கண்ணிவெடிகள் மற்றும் வெடி பொருட்கள் பூரணமாக அகற்றப்படாத நிலையில் யாழ் கண்டி ஏ-9வீதி புனரமைக்கப்படுவது கேள்விக்குறி யாகியுள்ளது.

மனிதநேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

ஏ-9வீதிப் புனரமைப்புக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி பெரு மளவு நிதியை ஒதுக்கியுள்ளது.

இதற்கு முன்னோடியாக நாம் துரித கதியில் வெடிப்பொருட்களை அப்புறப்படுத்தி அகற்றி வருகிறோம்.

இந்நிலையில் எமது பணிகளுக் காக சொற்ப நிதியையாவது ஒதுக் காமை எமக்கு கவலையளிப்ப தாகவுள்ளது.

சர்வதேச தரத்திற்கு அமைவாக நாம் எமது பணியை முன்னெடுப்ப தற்கு மருந்துவ விரைவு வாகனங் கள், கண்ணி வெடி அகற்றும் ஆள்தேடிகருவிகள், பாதுகாப்பு அங்கிகள், தொலைத்தொடர்பு வசதிகள் ஆகியன பற்றாக்குறை யாக உள்ளது.

ஆயினும் நாம் ஆரம்பித்த இப் பணியினை தொடர்ந்தும் மேற் கொள்வோம் என்று அவ்வறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-10)

## முஸ்லிம் தலைவர்கள் மக்கள் நலன் கருதி செயற்படவில்லை

### தளபதி கருணா கருத்து

(கொழும்பு)

பதவிப் போட்டிக்கான முஸ்லிம் அரசியல் வாதிகள் இன்று போட்டி யிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் கிழக்கு முஸ்லிம்க ளின் நன்மையை ஒரு போதும் கருதவில்லை.

விடுதலைப்புலிகளின் கிழக்குப் பிராந்திய விசேட தளபதி கேணல் கருணா நான்காம் சுற்றுப் பேச்சு வார்த்தை முடிவில் அளித்த பேட்டி யில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு நியமிக்கப்பட்ட உபகுழு இனி இயங்காது, அந்தக் கூட்டத்திற்கு இனி நாம் போவதா கவும் இல்லை.

எமது தலைவரினதும் எமது மக் களினதும் எதிர்பார்ப்பை அடிப்படை யாகக் கொண்டே நாம் எமது பிரச்சினையை அணுகுவோம்.

அரசின் அரசியல் நலன்களுக் காக நாம் எதையும் விட்டுக்கொடுக் கப்போவதில்லை என்று குறிப்பிட்டார்.(உ)

அறிவுடையார் ஆவதறிவார் அறிவிலார்
அஃதறி கல்லாதவர்
குறள்

## வலம்புரி

### இனவெறியே காரணம்

இலங்கையில் கடந்த இருபது வருடங்களாக ஏற்பட்ட இனப்படுகொலைகளுக்கும், பொருளாதாரச் சீரழிவுகளுக்கும், இலங்கையின் அரசியல் யாப்புகளும், நீதித்துறையின் செயற்பாடுகளுமே காரணம். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார். "நீதித்துறையின் வாய்மையை வலுப்படுத்தும் சர்வதேச நீதித்துறை சார் மூன்றாவது மாநாடு" நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றபோது, அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு கூறியுள்ளார். பிரதமரின் உரை சாதாரண இடத்தில் வைத்துக் கூறப்பட்டதல்ல, ஆசியா, ஆபிரிக்க நாடுகளின் பிரதம நீதியரசர்கள் கலந்து கொண்ட மாநாட்டிலேயே கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள அரசியல் யாப்புக்களும், நீதித்துறைச் செயற்பாடுகளும் சரியான முறையில் செயற்படுத்தப்பட்டிருக்குமாக இருந்தால், தமிழர்கள் தனிநாடு கோரவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. அதாவது, நாட்டில் வாழும் சகல இன மக்களினதும் சுதந்திரம், உரிமைகள் என்பன சரிவர உறுதிப்படுத்தப்படாத காரணத்தினாலேயே அமைதியாக - ஒற்றுமையாக இருந்த இலங்கைத் தீவில் இப்படியொரு பெரிய போர் நடந்தது எனப் பிரதமர் கூறியுள்ளார்.

"அரசியல் யாப்புகளும், நீதித்துறையும் சரியாகச் செயற்படுத்தப்பட்டிருந்தால்" எனப் பிரதமர் கூறியிருப் பதில், ஓர் மயக்க நிலை உள்ளது. அதாவது இனப் பிரச்சினை ஏற்படுவதற்கும், தமிழர்கள் தனிநாடு கோரு வதற்கும் காரணமாக இருந்தது, அரசியல் யாப்புகளும், நீதித்துறையும் சரியான முறையில் செயற்படுத்தப் படாமையா? அல்லது அரசியல் யாப்புகளிலும் நீதித்துறையிலும் காணப்பட்ட இனவயம் சார்ந்த சட்டங்களா? என்பது இங்கு கேள்விக்குரியது. ஏனெனில் சோல்பரிக்கின் அரசியல் யாப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் சிருஷ்டி கர்த்தாவால் படைக்கப்பட்டது. அங்கு, தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப் படுவதற்கான ஏதாவது குறிப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

அதே போன்று 1972 இலும், 1978 இலும் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்புக்கள் இலங்கை ஒரு சிங்கள பௌத்த தேசம் என்பதை நிலைநாட்டுவதாக இருந்ததேயொழிய அவற்றிலும் பல்லின உரிமைகள் பேணப்படவில்லை. இதில் அதிசயமென்னவெனில், 1978ல் யாப்பு தயாரிக்கப்பட்ட போது அதில் தற்போதைய பிரதமர் ரணிலும் ஓர் அங்கமாக இருந்தவர் என்பதுதான். எனவே பிரதமரின் கருத்துக்கு மேலாக சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்த இனவெறியே யுத்தத்திற்குப் பிரதான காரணம் எனலாம்.

# கடவுளுடைய சித்தத்தை நிறைவேற்றுபவர்களே பரலோக ராச்சியத்தில் பிரவேசிப்பவர்கள

கடவுளைப் பிரியப்படுத்த விரும்புகின்ற மனிதன் உண்மை மனமுள்ளவனாய் இருக்க வேண்டும். ஆனால், உண்மை மனமுள்ளவனாய் இருப்பது மாத்திரமே அவனுடைய மதத்தைக் கடவுளுடைய பார்வையில் ஏற்கத் தகுந்ததாக ஆகிவிடாது. அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய நாளிலிருந்த சிலரைக் குறித்துப் பின்வருமாறு எழுதும்படி கடவுளுடைய ஆவியால் ஏவப்பட்டான். "அவர்கள் தெய்வ வைராக்கியமுள்ளவர்களென்று அவர்களைக் குறித்துச் சாட்சி சொல்கிறேன் அதுவோ முற்றறிவோடு கூடிய வைராக்கியமல்ல. எப்படியென்றால் அவர்கள் கடவுளின் நீதியையறியாமல் தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தப்பார்த்துக் கடவுளின் நீதிக்குக்கீழ்ப்படியாதே போனார்கள். (ரோமர் 10:2,3 தி.மொ) இதன் விளைவாக அவர்களுடைய உண்மை மனமுள்ளத் தன்மை தவறாக வழிநடத்தப்பட்டது. போதனைக்காகத் தவறான திக்கில் நோக்கிக் கொண்டிருந்ததே அவர்களுடைய பிரச்சினையாகும். கடவுளுடைய குமாரனை-வேண்டாமென்று தள்ளிவிட்டிருந்ததும் அதன் காரணமாக அவர் தானே கடவுளால் தள்ளப்பட்டதுமான அந்த யூத மத ஒழுங்கையே அவர்கள் விடாது பின்பற்றிக்கொண்டிருந்தனர் அப்போஸ்தலர் 2:36,40 நீதிமொழிகள் 14:12

*பரலோக ராஜ்சியத்திற்குரியவர*

அப்படியானால், கிறிஸ்துவின் பெயரை எடுத்துக்கொண்டு அவரைத் தங்களுடைய கர்த்தராக ஏற்றிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் மதங்களைப் பற்றியது என்ன? அவருடைய பெயரில் அவர்கள் பிரசங்கிப்பதனாது, அவர்கள் கடவுளுடைய அங்கீகாரத்தைப் பெறுகிறார்களென்ற உத்தரவாதத்தை அளிக்கிறதா? ஏற்கனவே ஆலோசித்த வேத வார்த்தைகளைக் கவனிக்கையில் இல்லையென்ற முடிவுக்கு நீங்கள் ஒருவேளை வந்திருக்கலாம். அப்படியானால் கடவுளால் ப



லோக நியாயாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் இயேசு கிறிஸ்துவுடன் இந்தக் காரியத்தின் பேரில் நீங்கள் ஒத்திருக்கிறீர்கள். எப்படியென்றால், அவர் பின்வருமாறு கூறி நம்மை எச்சரிக்கிறார். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கின்றவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம்

## பரம பிதா காட்டிய பாதை

அல்லவா? என்பார்கள். அப்போது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்களென்று அவர்களுக்குச் சொல்வேன்" (மத்தேயு 7:21-23)

*கடவுள் சித்தம்*

கடவுளுடைய அங்கீகாரத்தைப் பெறுவதற்குப் பைபிளையும், கடவுளுடைய சித்தத்தையும் பற்றிய அறிவு அத்தியாவசியம் தான். ஆனால், இயேசு சொன்ன பிரகாரம் அந்தச் சித்தத்தைச் செய்வதே கருதப்படுகிறது. ஒருவன் தான் கற்றிருக்கும் காரியங்களோடு ஒத்த காரியங்களை உடையவனாயிருக்க வேண்டும். (யாக்கோபு 2:26) அப்படியானால் கடவுளைப் பிரியப்படுத்த ஒருவனுடைய மதம் பைபிளுடன் முற்றிலும் இசைந்ததாக இருந்து வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் பொருந்திப் பிரயோகிக்கப்பட வேண்டும். (லூக்கா 6:46-49)

*மெய் மதம்*

ஒரு மனிதனின் மெய்மதத்தை அப்பியாசித்து வருகிறானா என்பதை அவனுடைய 'கனிகளால்' அதாவது அவன் செய்யும் காரியங்களால் அறிந்து கொள்ளலாமென்று இயேசு கூறினார். (மத்தேயு 7:20) இதே விதமாக ஒரு மதத்தையும் அது எவ்வகையான ஆட்களை உண்டு பண்ணுகிறதோ அதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். மெய்மதம் மேம்பட்ட ஆட்களை உண்டு பண்ண வேண்டும். 'மேலும் சிறந்த கணவன்மாரையும், தகப்பன்மாரையும் உண்டு பண்ணவேண்டும். மேலும் சிறந்த மனைவிமாரையும் தாய்மாரையும் உண்டுபண்ண வேண்டும். தாங்கள் சரியானதைச் செய்வதன் காரணமாக மற்றவர்களுக்குள் தனித்து நிற்க நேர்மையான ஆட்களை அது உண்டு பண்ணவேண்டும்.

**மதிவாணர்**

ஒருவரை உண்மையில் கடவுளிடம் நெருங்கிவரச் செய்யும் ஒரு மதம் இதைச் செய்யும் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்களல்லவா? கடவுளுங்கூட இந்தக் காரியங்களை எதிர்பார்க்கிறார். இவை ஒரு மதம் கடவுளால் அங்கீகரிக்கப்பட்டதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்றன. கடவுளுடைய சித்தத்தைச் செய்யத்தவறினதன் காரணமாக கடவுளுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க அனுமதி அளிக்கப்படாதவர்களோடு வகுக்கப்பட நீங்கள் நிச்சயமாகவே விரும்பமாட்டீர்கள். அப்படியானால் பைபிளுடன் நன்றாய் அறிமுகமாவது உங்களுக்கு நன்மையாயிருக்கும்.

**வடக்கு – கிழக்கில**

# 3 ஆயிரம் ஆசிரியர்கள நியமனம் பெறுவர்

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையை நீக்கும் பொருட்டு 3 ஆயிரம் ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

இவ்வாறு கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். நேற்று திருகோணமலையில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான கல்வி சார் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்குக் கிழக்கிலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு உலக வங்கி ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வடக்குக் கிழக்குப் பகுதிகள் புறக்கணிக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட விளைவுகளைக் கருத்தில் கொண்டேபிரதமர் தற்போது செயற்பட்டு வருகின்றார். அதன் ஒரு கட்டமாக தமிழ் மொழி மூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் கூறினார்.

(த)

# நிவாரணம்தொடர்பான பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர்

(கொழும்பு)

இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவா ரணம் தொடர்பாக அடிக்கடி ஏற்படும் பிரச்சினைகளுக்கு விரை வில் தீர்வு காணப்படவுள்ளதாக வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மசூர் தெரிவித்துள்ளார்.

வடமாகாண அகதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரடியாக அறிந்துள்ள வகையில் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் முறையான திட்டம் கடந்தகாலங்களில் செயல்ப்படுத்தவில்லை.

இதனால் நீண்ட கால மற்றும் குறுகிய காலத் திட்டங்களை எதிர் காலத்தில் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு நடைமுறைப் படுத்தவுள்ளது என்று மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

## கொள்ளையர் கைவரிசை

(காலி)

காலி எரிபொருள் விற்பனை நிலையத்திற்கு வந்த ஆயுதக் கும்பல் ஒன்று 50 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் முச்சக்கரவண்டியொன்றில் வந்த இளைஞர் கோஷ்டியினர் துப்பாக்கியைக் காட்டி உரிமையாளரைப் பயமுறுத்தி பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-10)

# மு.கா. பேராளர் மாநாட்டை தடை செய்யும் மனு

**உயர்நீதி மன்றத்தால் தள்ளுபடி**

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 8 ஆவது பேராளர் மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு மகாபொல பயிற்சி நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பேராளர் மாநாட்டிற்கு சுயகட்சி யாப்பின்படி பேராளர் அங்கத்துவம் பெற்ற சுமார் 200 பேர் மாத்திரமே அழைக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் கே.பயிஸ் தெரிவித்துள்ளார். இம்மாநாட்டில் கட்சியின் யாப்பு மீதான முக்கிய திருத்தங்களும், தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளன.

இதே வேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 18 ஆவது பேராளர் மாநாட்டைத் தடைசெய்யுமாறு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான விசாரணைகளை நடத்திய கொழும்பு மாவட்ட நீதிபதி மாலினி குணரட்ண மாநாட்டைத் தடை செய்யும்படி கோருவதற்கான போதிய காரணங்கள் இல்லையெனக் கூறி அந்த மனுவைத் தள்ளுபடி செய்தார். (த-8)

# தமிழ்ச்செல்வன், கருணா வன்னி வந்து சேர்ந்தனர்

(கொழும்பு)

நான்காவது சுற்றுப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கருணாவும் நேற்று முன்தினம் கட்டு நாயக்கா விமான நிலையம் வந்தடைந்தனர்.



கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் இருந்து விசேட உலங்கு வானூர்தி மூலம் இவர்கள் இருவரும் வன்னி சென்றுள்ளனர்.

இப்பேச்சு வார்த் தைகளில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் ஏனைய பிரதிநிதிகளான உருத்திரகுமார் அமெரிக்காவுக்கும், மகேஸ்வரன் அவுஸ்திரேலியாவுக்கும் நேற்று தாய்லாநதிலிருந்து புறப்பட்டனர்.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் குழு கடந்த 4 ஆம் திகதி வன்னியிலிருந்து புறப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

(உ-8)

**தினசரி தியானம்**

# கொடு! கொடு!!

தான தருமங்கள் மூலம் பாவங்கள் நசிந்து போகின்றன என இயேசு நாதர் சொல்கிறார். பாவம் எண்ணற்ற பாவங்களை நிவர்த்திக்கிறது என்று கீதை சொல்கிறது. "யக்ஞோ, தானம் தபஸ்ஸைவ பாவனாணி மனிஷிணாம்" வேள்வி, தானம் நியம நிஷ்டைகள் முதலியன மனிதர்களைப் பரிசுத்தப்படுத்துகின்றன.

துன்பத்தில் துவளும் மனித வர்க்கத்தின் சுகத்திற்காக அளவற்ற தானம் செய்வது, துர்க்குணத்தையே நசிக்கச் செய்வதற்கு ஒரு சிறந்த வழியாகும். நீ பிறருக்குக் கொடுத்தால், உலகின் செல்வமெல்லாம் உனதாகிவிடும். செல்வம் உன்னைத் தேடிவரும். இது மாற்ற முடியாத, மீற முடியாத இயற்கையின் விதியாகும். எனவே கொடு! கொடு!!

**சுவாமி சிவானந்தர்**

# உதைபந்தாட்டத்தில் இலங்கை அணி வெற்றி

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெறும் தெற்காசிய கால்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் ஆரம்பப் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையில் டாககா மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. இலங்கைக்கான கோலை அணித் தலைவர் டட்லி ஸ்ரெய்ன் வேல் 43வது நிமிடத்தில் அடித்தார்.

இதேவேளை இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தான் அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இன்று நடைபெறும் இரண்டு போட்டிகளில் இலங்கையும் பாகிஸ்தானும் ஒரு போட்டியிலும, மற்றைய போட்டியில் இந்தியாவும் ஆப்கானிஷ்தானும் விளையாடுகின்றன.

(ந-5)

# கேணல் கிட்டுவின் 10-வது நினைவு தினம்

## சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் பத்தாவது ஆண்டு நினைவு தினம், தமிழர் தாயகப் பிரதேசமான வடக்குக் கிழக்கில் மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

எதிர்வரும் 16ம் திகதி இடம் பெறவுள்ள இந்நிகழ்வுகள், யாழ்.குடாநாடு உட்பட வன்னிப் பெருநிலப்பரப்பு மற்றும் கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களில் நினைவு தின நிகழ்வுகள் இடம் பெறுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனையொட்டி நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள கேணல் கிட்டுபூங்கா புனரமைக்கப் படுகின்றது.

தமிழீழ போராட்ட வரலாற்றில் பல போரியல் சாதனைகளைப் படைத்த கேணல் கிட்டு, சர்வதேச தொடர்பாளராகவும் பணியாற்றியவர்.

1993ம் ஆண்டு வங்கக் கடலில் எம்.வி.அகத் கப்பலில் தாயகம் நோக்கி ஒன்பது போராளிகளுடன் வந்து கொண்டிருந்த போது, இந்தியப்படைகள் கப்பலை வழிமறித்து அவரைக் கைதுசெய்ய முற்பட்டன. அதனால் கப்பலைத் தகர்த்து வீரகாவியமானவர் கேணல் கிட்டு. (இ)

---

### தேசிய கீதத்தை...

பிரிவை மீறியுள்ளது. தேசிய கீதத்தை மீள இசைப்பதன் நோக்கம் சமஷ்டி அரசுக்கு பொருத்தமாக அதனை அமைத்துக் கொள்வதே ஆகும்.

ஐ.தே.அரசின் தனியார் மயமாக்கற் கொள்கைக்கு இறுதியில் தேசிய கீதமும் பலியாகிறது. ரோஹண வீரசிங்கவின் இசையமைப்பில் டபிள்யூ.டீ.அமரதேவாவும், நந்தமாலினியும் இதனைப் பாடியிருக்கிறார்கள். ஆனால் தேசிய கீதம் அவர்களின் தனியார் சொத்து ஆகிவிடமுடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

---

### கொழும்பு...

யாழ் மாநகர எல்லைக்குள் எவரும் எப்பணிகளை மேற் கொள்வதாயினும் யாழ்.மேயரிடம் அனுமதி பெற்றே அதனைச் செய்ய வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

---

### சிப்பாய்க்கு பிணை...

எதிர்வரும் 23ம் திகதி வரை இவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதியரசர் உத்தர விட்டுள்ளார்.

இவ் வழக்கு விசாரணை இடம்பெற்றபோது பிரஸ்தாப சிப்பாயின் பெற்றோரும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளும் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தனர். (இ)

---

### சமாதானம்...

இடையில் சமரசத்தை ஏற்படுத்தி, இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைப் பெற்றுக் கொள்ள. மூன்றாந் தரப்பு மத்தியஸ்தராகச் செயற்படும் நோர்வே அரசுக்கு, ஜனாதிபதியான தாங்கள் பூரணமான ஆதரவு வழங்கி வந்துள்ளீர்கள் அது எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது.

சமாதானம் என்ற பாதை கடினமானது. அதில் இருதரப்பும் இடைவிடாத பற்றுறுதியோடு, செயற்பட்டால் தான், பூரணமான சமாதானத்தை அடைய முடியும்.

நோர்வே அரசு பூரணமான தனது மத்தியஸ்தப் பணியை, எந்தவித பாகுபாடுமின்றி நடுவு நிலையோடு ஆற்றிவருகின்றது.

சமாதானத்தில் ஈடுபடும் இரு தரப்பும் உண்மையான சமாதானத்தை அடையும் வரை நோர்வே தனது பணியை தொடர்ந்து மேற்கொள்ளும்.

நோர்வேயின் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை ஜனாதிபதியான தாங்கள் தங்களின் கடிதத்தில் பாராட்டியிருந்தீர்கள் அது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது.

சமாதான முயற்சியில் உங்களின் பற்றுறுதியும் ஈடுபாடும் இருப்பதாலேயே, சமாதான முயற்சி இவ்வளவு தூரத்திற்கு முன்னேறி உள்ளது. அதனை நாம் வரவேற்கின்றோம்.

விடுதலைப் புலிகளுக்கு வானொலிச் சாதனங்களை நோர்வே தூதுவர் ஊடாக வழங்கியமை குறித்து எழுந்த சந்தேகத்தைத் தீர்க்கும் வகையில், இலங்கை அரசாங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டமைக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம் என்று அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

---

### மின் உற்பத்தி...

தெரிவித்து விட்டோம். 1994-1996 காலப்பகுதியில் இது தொடர்பாகப் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் நடத்தப் பட்டன. அப்போது அந்த நிலக்கரி மின் உற்பத்தி ஆலையை திருகோணமலையில் நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கம் விருப்பம் தெரிவித்திருந்தது. ஆனால் அப்போதைய அரசு-புலிகள் ஒப்பந்தம் முறிந்து விட்டதனால் அத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

அம்பாந்தோட்டையிலேனும் இந்த உற்பத்தி நிலையத்தை நிறுவ அரசாங்கம் அனுமதி தருவதாக இல்லை. இலங்கையில் மின்தட்டுப்பாடு நிலவும் போது அரசாங்கம் இதனை ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரியாமலிருக்கின்றது. இலங்கை மின்சார சபை யப்பானிய அரசாங்கத்திடம் நிதியுதவி பெற்று, உற்பத்தி நிலையத்தை அமைக்கும் நிலையம் பற்றி ஆய்வு செய்வதற்கு 500 மில்லியன்களைச் செலவிட்டுள்ளது. ஆனால் எம்மால் அதனை மூன்று மாதங்களுக்குள் ஆய்வு செய்து விட முடியும் என்றும் பினம் கனம் தெரிவித்துள்ளார். (இ)

---

# விளையாட்டுச் செய்தி

### ஆறாவது ஒருநாள் போட்டி

## நியூசிலாந்து அணி இந்தியாவிடம் தோற்றது

(ஆக்லண்ட்)

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற ஆறாவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி ஒரு விக்கெட்டினால் வெற்றி பெற்றது.

ஆக்லண்டில் பகல், இரவுப் போட்டியாக நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50ஓவர்களின் முடிவில் 9விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லோவின்சன் ஆட்டம் இழக்காமல் 53ஓட்டங்களையும், ஸ்டைரிஸ் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்து வீச்சில் இந்திய அணி வீரர்களான சிறிநாத் 13ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும் ஸஹீர்கான், நெஹ்ரா, அகாகர், கங்குலி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 48.5ஓவர்களின் முடிவில் 9விக்கெட்டுக்களை இழந்து 200ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இதில் வீரேந்தர் செவாக் சிறப்பாக விளையாடி 112 ஓட்டங்களையும், கங்குலி 23ஓட்டங்களையும், ராகுல் ராவிட் 21ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அன்ரூ அடம்ஸ் 3விக்கெட்டுக்களையும், சேர்வோன் டரல்டபி, மைக்கல், ஸ்டைறிஸ், ஹரில் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதேவேளை 7போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் நியூசிலாந்து அணி 4 : 2 என்ற நிலையில் முன்னனியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

### சர்வதேச ஒருநாள் கிறிக்கெற்

## இங்கிலாந்து அணியை அவுஸ்ரேலியா வென்றது

(கோபாட்)

இங்கிலாந்திற்கும் அவுஸ்ரேலியாவுக்குமிடையில் கோபாட் விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற மும்முனை ஒருநாள் கிறிக்கெற் போட்டியில் அவுஸ்ரேலியா 7ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 50ஓவர்களின் முடிவில் 4விக்கெட்டுக்களை இழந்து 271ஓட்டங்களைப் பெற்றது.

இதில் டேமியன் மாட்டின் சிறப்பாக விளையாடி ஆட்டம் இழக்காமல் 101ஓட்டங்களையும், மைக்கல் வெவன் 52ஓட்டங்களையும், மெகர் ஆட்டமிழக்காமல் 49ஓட்டங்களையும் பெற்றனர்.

இதனைவிட உதிரிகளாக 31 ஓட்டங்கள் அவுஸ்ரேலிய அணிக்குக் கிடைத்தது. அவுஸ்ரேலிய அணியின் முதலாவது விக்கெட் 7ஓட்டங்களிலும் இரண்டாவது விக்கெட் 25 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலும் 3ஆவது விக்கெட் 53ஓட்டங்களைப்பெற்ற நிலையிலும் 4வது விக்கெட் 171 ஓட்டங்களை பெற்ற நிலையிலும் வீழ்த்தப் பட்டது.

பந்துவீச்சில் அன்ரஸ்சன் 2 விக்கெட்டுக்களையும் கமிஸ்டன் ஒரு விக்கெட்டையும் பிலாக்வெல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

272ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து வீரர்களான நிக்ரைட்,மார்க்ஸ் ரெஸ்கொத்திக் ஆகிய இருவரும் சிறப்பாக விளையாடி 165ஓட்டங்களைப் பெற்ற வேளையில் முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது.

எனினும் இங்கிலாந்து அணி 50 ஓவர்களின் முடிவில் 7விக்கெட்டுக்களை இழந்து 264 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் நிக்ரைட் 85ஓட்டங்களையும், மார்காஸ் ரெஸ்கொத்திக் 82ஓட்டங்களையும் நசார் குசைன் 43ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கோக் 3விக்கெட்டுக்களையும், வட்சன் 2விக்கெட்டுக்களையும், பிக்கல், மாட்டின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதேவேளை இரண்டாவது சுற்றின் மூன்றாவது போட்டி நாளை சிட்னியில் இலங்கைக்கும் இங்கிலாந்திற்கும் இடையில் நடைபெறவுள்ளது. (இ-5)

---

### வட பகுதியில்...

கண்டிப்பாக பின்பற்றியே மேற்கொள்ளப்படும். ஆட்சேர்க்கப்படுபவர்கள் குறுகிய கால பயிற்சியொன்றின் பின்னரே பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவர்.

கடந்த ஆண்டின் ஆரம்பப் பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஐயாயிரம் வரையான தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கும் 700 வரையிலான ஆங்கில ஆசிரியர்களுக்கும் தட்டுப்பாடு இருந்தது.இது போன்ற தட்டுப்பாடு மலையகத்திலும் உள்ளது. ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களைப் போலல்லாது மலையகத்தில் கல்வித்தராதரம் நிறைந்தவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை.

நாம் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கில் பாடசாலை ஒழுங்கு முறைமைகளை சீர்திருத்தி வருகின்றோம. அதனால் அவசர ஆட்சேர்ப்புக்களில் கூட அது களங்கப்பட்டு விடக் கூடாது என்பதில் அவதானமாயிருக்கின்றோம் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

(மற்றொரு செய்தி -9ம் பக்கம்)

---

### தொழிற்பயிற்சி நேர்முகப் பரீட்சை

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 2003ம் ஆண்டிற்கு சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30மணிக்கு கிராமிய தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (இ-5,232)

---


## பதவி வெற்றிடம்

**பிரதேச செய்தியாளர்கள் (ஆண்கள்)**

**பின்வரும் பிரதேசங்களில் வெற்றிடங்களை நிரப்பவும், மேலதிகமாகவும் செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.**

| வடமராட்சி | தென்மராட்சி | தீவகம் |
|---|---|---|
| நெல்லியடி | சாவகச்சேரி | மண்டைதீவு |
| கரணவாய் | கைதடி | அல்லைப்பிட்டி |
| அல்வாய் | நாவற்குழி | மண்கும்பான் |
| வல்வெட்டித்துறை | மீசாலை | வேலணை |
| உடுப்பிட்டி | மிருசுவில் | புளியங்கூடல் |
| தொண்டைமானாறு | கொடிகாமம் | நாரந்தனை |
| நாகர்கோவில் | கச்சாய் | புங்குடுதீவு |
| குடத்தனை | எழுதுமட்டுவாள் | அனலைதீவு |
| | மட்டுவில் | நெடுந்தீவு |
| | வரணி | நயினாதீவு |
| | | எழுவைதீவு |

**தகைமை - க. பொ. த (சாதாரணம்) சித்தி**

தகுதியும், ஆர்வமும் உடையவர்கள் முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, பிறந்த திகதி, தே.அ.அ.இல, கி.சே.பிரிவு, பி.செ.பிரிவு, குடியியல் தகைமை, கல்வித் தகைமை, தொழில் புரிபவராயின் தொழிலின் தன்மை, தொழில் புரியும் திணைக்களம், இடம், மேலதிகத் தகைமை ஆகியன உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை

ஆளணி முகாமையாளர்
வலம்புரி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு 18.01.2003 ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனத் தவறாது குறிப்பிடவும்

வலம்புரி ஆளணி முகாமையாளர்



சிவமயம்

## ஜோதிடம்

**இந்திய பரம்பரை சாஸ்திரியார்**
**அருள்வாக்கு அம்பிகா அம்மா**

அவர்கள் முதன்முறையாக யாழ். மாநகருக்கு வருகை தந்துள்ளார்கள். கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும். ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும் மற்றும் எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் ஜோதிட ரீதியாகச் சரி செய்யப்படும்

தொடர்புகளுக்கு:-
**அருள்வாக்கு அம்பிகா அம்மா**
**மடோனா லொட்ஜ்**
(லிங்கன் கிறீம் ஹவுஸ், ஸ்ரீ முருகன் ஜுவலர்ஸ் அருகில்)
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு :- ஒவ்வொருநாளும் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை பார்க்கப்படும் [C/5625]



## MEDICAL CHECK UP
## வைத்திய பரிசோதனை

**நோய் வருமுன் காப்போம்**
**திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்**

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
- X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள். சிறுநீர்ப்பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C/5626]



THE ROYAL COLLEGE OF JAFFNA
SPOKEN ENGLISH WITH GRAMMAR
VIGNESWARAN ARCHERY
426(302) K.K.S Rd JAFFNA
BLACK ROAD,CHANKANAI



## ராஜா
யாழ்ப்பாணம்
01.01.2003 முதல்

முரளி, ராதிகா சௌத்ரி, வடிவேல், மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த

**சுந்தரா ரவல்ஸ்**

10.30, 2.30, 6.30
(C/5524)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ. ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.